முரசொலி

அண்ணா பெரியார் சிறப்பிதழ்

23.9.79

இந்து

என்றால் பிலிம்

போட்டோ-சினி-எக்ஸ்ரே.

இந்த சமயத்தில்தான் நாங்கள் ஓர் உண்மையை சொல்கிறோம். ஆனால், மூன்று வருடங்களாக இந்து எல்லாவித போட்டோ கிராபிக் பொருட்களையும் தயாரித்து வருகின்றது. இந்தியாவில் பிலிம் தயாரிக்கும் ஒரே கம்பெனி இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்தான் என்பது மட்டும் விசேஷமல்ல; போட்டோ சென்ஸிடைஸ்டு பிலிம் தயாரிப்பில் மிக நவீன தொழில் நுணுக்கத் திறனைப் பெற்றுள்ள உலகின் தலை சிறந்த ஆறு கம்பெனிகளில் ஒன்றாகும் என்பது வியக்கத்தக்கது.

இந்துவின் தனிச்சிறப்பிற்குக் காரணம்: உலகிலேயே ஆறு நாடுகள் தான் அவர்களுக்கான பிலிமினை அவர்களே தயாரித்துக் கொள்கின்றனர். அவற்றில் இந்தியா ஒன்று. இந்தியாவிற்கே பெருமிதம் இந்து.

இந்து, அதனுடைய மேல் நாட்டுத் தொழில் கூட்டாளர்களிடமிருந்து மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு சர்வதேச தர நிர்ணயத்திற்கேற்ப தரமிக்க போட்டோ பிலிமினைத் தயாரிக்கின்றது.

இந்து — முன்னணியாளர்களுடன் முன்னணியில் நிற்கிறது.

இந்துவின் சிறந்த தரத்திற்கு உறுதியான சான்று — தலை சிறந்த தொழில் முறை போட்டோகிராபர்கள், படத் தயாரிப்பாளர்கள், திரைப்பட இயக்குனர்கள், ரேடியாலஜிஸ்ட்டுகள் — இவர்கள் எல்லோரும் இந்துவையே விரும்பி தேர்ந்தெடுப்பதேயாகும். அவர்களுக்குத் தெரியும், இன்று எங்கெல்லாம் தரம் என பேசப்படுகிறதோ அங்கெல்லாம் இந்துவின் பெயரும் இணைந்திருக்குமென்பது.

இந்து அளிப்பவை — உங்கள் தரத்திற்குச் சான்று:

இந்து ரோல்பிலிம். இந்து ப்ரோமைட் பேப்பர். இந்து சினிபாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து எக்ஸ்ரே. இந்து பாலியெஸ்டர் எக்ஸ்ரே. இந்து மீடியம் கான்ட்ராஸ்ட் கிராஃபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டியாபநஸிடிவ். இந்து டாகுமெண்ட் காபியிங் பேப்பர்.

இந்து அளிப்பவையெல்லாம் நியாயமான விலையில் சீரிய தரத்துடன் விளங்குகின்றன. தரத்தினை நீங்கள் நம்பலாம். ஏனெனில் அவைகள் இந்துவின் படைப்புகளாயிற்றே!

ஆம், இந்து இன்று தன்னிறைவு பெற்று சிறப்பாக இயங்குகின்றது. அதனால்தான் நாங்கள் உறுதியுடன் கூறுகிறோம்: "இந்து என்றால் பிலிம்"

INDU®

இந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கோ. லிமிடெட்
(இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர், உதகமண்டலம் 643 005.



தலைமுறைகளை வலுவாகப் பிணைக்கிறது உங்களின் இன்றைய சேமிப்பு

இந்த இ[illegible] பலப்படுத்துங்கள். உங்கள் குழந்தைகளின் கல்வி, அன்பு மகளின் திருமணம், வீடு, வாகனம் போன்ற வசதிகளைப் பெற தங்களின் சேமிப்பு உதவும்.

சிறுதுளி-பெருவெள்ளம்.

பெருந்தொகைகளையே சேமிக்க வேண்டும் என்பதில்லை. எவ்வளவு சிறிதாக சேமிக்க இயலுமோ, அவ்வளவிற்கு அது சுலபமாகிவிடுகிறது. எங்களது சிறந்த சேமிப்புத் திட்டங்கள் மூலம் அது பெரியதாக வளருவதைக்கண்டு வியப்படைவீர்கள். சுலபமான முறையில் சேமிக்கத்துவங்கி, எதிர் காலத்தைப் பாதுகாப்பாகவும், பயனுள்ளதாகவும் உருவாக்குங்கள்.

எமது தனிச் சிறப்பான சேமிப்புத் திட்டங்கள்

- தேனீ சேமிப்புத் திட்டம்
- ஜம்போ சேமிப்புத் திட்டம்
- சூர்யோதயா சேமிப்புத் திட்டம்
- திருமகள் திருமணத் திட்டம்

முழு விவரங்களுக்கு எங்கள் கிளை அலுவலகங்களுடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.,

மத்திய அலுவலகம்: தபால் பெட்டி எண்: 21
கரூர்-639 001

கே.வி. ராகவாச்சாரி
சேர்மன்

சங்கு
மார்க்
K.E.Md. ABOOBACKER
சங்கு
REGD. TRADE MARK
கொ.இ.முகம்மது அபுபக்கர்
கைக்குட்டைகள்
Mickey Mouse
முகம்மது அபூபக்கர் & கம்பெனி
238, தம்பு செட்டி தெரு, சென்னை-600001.
கிளைகள்:- கல்கத்தா • மதுரை • கொல்லம் • பம்பாய்.
ஷோரூம்கள்:- நாகூர் • பெங்களூர்.

அன்புத் தந்தையே! ஆருயிர் அண்ணனே!
எங்கள் நெஞ்சம் நிறைந்து ரத்தோட்டத்
துடன் இரண்டறக் கலந்து இதயத்தின்
துடிப்புக்களாக ஆகி விட்டவர்களே!
நீங்கள் பட்டபாடு வீண் போகாமல்
வழங்கிய அறிவுச் செல்வம் பாழாகாமல்
உங்கள் வழி நடப்போம்! உயிர்த் தித்திப்
பை எண்ணிடாமல் உறுதி கொண்டவர்
களாக நாட்டுக்கும், மொழிக்கும், மக்
களுக்கும் உழைப்போம்!

வாழ்க உங்கள் புகழ்!
விலங்கொடித்த
வீரத் தலைவர்களே!

கோபுரத்தின்
உச்சித் தீபமாக
ஒளிவிடுவதற்கே

எங்களையே நாங்கள் அர்ப்பணித்துக்
கொள்வோம்!

மு. கருணாநிதி
15/9/1979.

அண்ணாவின் உரையும் உள்ளமும்

பேராசிரியர்

பேரறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களின் 71-ஆம் ஆண்டுப் பிறந்த நாளேயும், பேரறிஞரையும் நாம் பெறுதற்கு ஏதுவான தந்தை பெரியார் அவர்களின் நூற்றுண்டு நிறைவு நாளேயும், தமிழகம் வாழ்வோங்கும் வழிகண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் 31-ஆம் ஆண்டு துவக்க நாளேயும் இன்று ஒருங்கே கொண்டாடுகிருேம் நாம்.

தமிழினம் தன்மானத்தோடு தலே நிமிர, இன உணர்வு கொள்ள, தமிழ்மொழி உயர, வேற்றுமொழி ஆதிக்கம் தடுக்கப்பட வழி கண்ட இயக்கத்தின் தலேவர் – தளபதி – அமைப்பு ஆகியவற்றைப் போற்றுவது நம் கடமையன்ருே!

அறிஞர் அண்ணு அவர்கள் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளேப் பரப்பும் பேச்சாளராக, எழுத்தாளராக, நீதிக் கட்சி மேற்கொண்ட வகுப்புரிமைக் கொள்கைக் காவலராக, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் படையின் தளபதியாக, ஆரிய மொழி கலாச்சார மாயையினே விளக்கித் தமிழ்மொழி–பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு வழி கண்ட வித்தகராக, தமிழ் இனப் பற்ருேடு அரசியல் வளர்த்து தி.மு.க. கண்ட அறிஞராக, தமிழகத்தின் தனிப்பெருந் தலேவராக விளங்கினர்.

கட்டுரை வரைவதிலோர் தனி ஆற்றல். கதைகள் புனேவதிலோ பேராற்றல். புதினங்கள் படைப்பதிலும் வல்லமை. நாடகங்கள் தீட்டுவதிலோ இணேயற்ற கற்பனேத் திறன். உரைநடைக் கவிதை இயற்றவும் ஓர் ஆற்றல். உரையாடல்கள் வரைவதிலே ஒரு தனி கலேத்திறன். இவ்வளவும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வடித்துத் தரும் பெரும் புலமை, அண்ணு அவர்களிடம் குடிகொண்டிருந்தது.

அவரது எழுத்துக்களே – ஏடுகளேப் படிப்பதில் இளேஞர்கட்குப் பேரார்வம். இய[illegible]ர்களெல்லாம் [illegible] தகிக் [illegible]

எழுத்தாற்றலிலே ஒரு [illegible]ராக விளங்கிய அண்ணு அவர்கள், பேச்சாற்றலிலே மக்கள் கூட்டத்தின் தன்த்தலேவனுக, அவர்தம் உள்ளங் கொள்ளே கொண்டவராக, இசையரசாக விளங்கினுர்கள். மேடையில் ஏறிப் பேச முற்பட்டு விட்டால், கேட்போர் உள்ளங்களே எல்லாம் தடவி வரும் தமிழ்த்தென்றலாக ஆட்சி நடத்தினுர்.

''யாழினிது குழலினிது என்பர் தம் மக்கள்
மழலேச் சொற் கேளாதார்''

என்பது அன்று பிறந்த குறள்.

''யாழினிது குழலினிது என்பர் எமதண்ணன்
பொழியும் உரை கேளா தார்''

என்னும் புதுக்குறள் பிறக்குமாறு சொற்பொழிவு நிகழ்த்தியவர் அண்ணு!

தெவிட்டாத தேன்பிழிவோ எனத் தித்திக்கும் சுவை ஏற்றி கொள்கை எனும் கசப்பான மருந்தையும் எல்லோரும் ஏற்குமாறு வழங்குவதில் சமுதாய மருத்துவர் அவர்.

கடல்மடை திறந்தது போன்றது அவரது உரை. கடலனேய மக்கள் கூட்டம் அவர் கண்முன். அந்த மாபெருங் கூட்டமும் – உருவத்தால் பலராயினும் உணர்ச்சியால் ஒருயிராய்த் திரண்டிருந்த மாட்சியே மாட்சி!

அண்ணுவின் நா அசையும்போது எழும் ஒவ்வொரு சொல்லேயும் (உச்சரிப்பையும்) கூர்ந்துகேட்கும்மக்கள், திறந்த வாய் மூடாமலே மெய்மறந்தும், இடையிடையே உணர்ச்சி வயப்பட்டும், வாய் விட்டுச் சிரித்தும் ஆங்காங்கே கைதட்டி வரவேற்றும், செய்து வைத்த சிற்பங்களோ என்னுமாறு ஆண் பெண் அடங்கலும் அமர்ந்திருக்கும் காட்சியே– ஒரு திறன்மிக்க கவிஞனுக்கு கவிதைக் கருவாகும் காட்சியாகும்.

அந்த மக்கள் தம்மிடையே ஒரு சிறு ஓசை எழவும் – சலசலப்பு ஏற்படவுங்கூட இடமளிக்கமாட்டார்கள்.

திருக்குற்ருல நீரருவி போன்று இடையீடின்றி இதமாகப் பொழியும் உரை. தெளிந்த நீரோடை போன்று பளிச்சென்று பொருள் விளங்கும் சொற்கள். எதுகையும் மோனேயும் இயல்பாகவே பிறந்து ஓசைநலங் காட்ட, உவமைகளும் நகைச்சுவையும் களிநடம் புரிய, சிறு கதைகள் சுவை ஏற்றித் தெளிவூட்ட, மேடைப் பேச்சுக்கே அண்ணுவின் பேச்சு இலக்கணம் கண்டது எனலாம். கேட்போர் ஆழ்ந்து சிந்தித்தும் தெளிய முடியாத உண்மைகளே, எளிதாக உணரச் செய்வதில் அண்ணு ஓர் விற்பன்னர்.

இந்த ஆற்றல் அத்தனேயும் அவரது பரந்த கல்வியால், ஆழ்ந்த சிந்தனேயால், நிறைந்த புலமையால் விளேந்தவை எனலாம். அவரது இலக்கிய ஈடுபாடு – அறிவைக் கூர்மையாக்கி, இதயத்தை வளமுடையதாக்கி, ஒரு பண்பாட்டுச் செல்வராக அவரை மேம்படுத்தியது.

அண்ணு அவர்கள் படித்தார், கற்ருர், சிந்தித்தார், தெளிந்தார். அவற்றை மக்களுக்கு வழங்கும் ஆர்வமும் கொண்டார். அந்த மக்கள் மனநிலேயையும் ஓர்ந்தார். அவர்கள் உணர வேண்டியதை, உணர்த்தும் வகையறிந்து உரைப்பதையே தம் கடமையாகவும் கொண்டார்.

அவரிடமிருந்து பிறந்த சொல்லெல்லாம் வெல்லுஞ்சொல், வெல்லச்சொல் [illegible] கருத்தெல் [illegible]

அவர் எப்பொழுதும் கனியிருப்பக் காய் கவர்ந்ததில்லே தமது பேச்சில். கேட்போர், செவிகுளிர, சிந்தை மகிழ, உள்ளம் உவகையுற, உடல் அயர்வு நீங்க அவரது உரையை மாந்தினர். மூப்பு நரை கண்ட கிழவரும் இளேஞர் என எழுச்சிகொண்டனர் எனில், அந்தப், பேராற்றலே விளக்க வேறென்ன வேண்டும்?

அண்ணு அவர்கள், எதைப் பேசுவது, அதையும் எப்படிப் பேசுவது, எங்கு பேசுவது, எப்போது பேசுவது, எந்த அளவு பேசுவது என்பதை எல்லாம் அறிந்திருந்தார். அவற்றை விட எதைப் பேசக்கூடாது என்பதையும், பயனில சொல்லாதிருத்தலேயும் உணர்ந்திருந்தார்.

கேட்போர் உடன்பாடு கொள்ளுமாறு பேசுவது அவருக்குக் கைவந்த கலே. கேட்போர் உடன்பாடு கொள்ளாதிருக்க – மாறுபாடு வளரப் பேசுவதிலோர் சிறப்புமில்லே, பயனுமில்லே என்பது அவர் முடிவு.

கேட்போர் மாறுபாடு காட்டக் கூடிய கருத்தையும் மறுப்பதற்கு இடம் இல்லாத வகையறிந்து பேசுவதும், அனேவரும் எளிதில் அறியக் கூடிய காரண காரிய விளக்கங் கூறியே அவர்கள் அதுகாறும் ஏற்காத உண்மையை ஒப்புக்கொள்ளச் செய்வதும், மாற்றுக்கொள்கையுடையோர் பெற்றுள்ள உலகியல் தகுதிகளே மதித்து உரைப்பது மூலம் தமது கருத்து மாறுபாட்டினே மதித்துச் சிந்திக்கும் மனப்பான்மையை உருவாக்குவதும், அவரது வாதிடும் வல்லமையை உயர்த்தியவை ஆகும்.

'மாற்ருன் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்று கூறிய அண்ணு அவர்கள், அதை நுகரும் அறிவுப்புலன் உடையவராதலின், பாராட்டி ஏற்க வேண்டிய மாற்ருர் கருத்தை ஏற்று, ஒதுக்க வேண்டியவற்றை ஒதுக்கி, மறுக்கவேண்டியவற்றை மட்டுமே மறுப்பார். எனவே, தாம் மாறுபடுவனவற்றை வரையறைக்குள் நிறுத்தி - பொது நோக்கில் ஒன்றுபட்டு நின்று, பெரும்பாலோர் மனத்தில் தாம் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவர், தம்மிடமிருந்து பிறக்கும் மாறுபட்ட கருத்தும் நியாயமுடையவையாகவே இருக்கும் என்னும் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் நாளும் வளர்ப்பார்.

தம்மை இகழுவோரைத் தாம் இகழ்வதே முறையாக்கிக்கொள்ளாமல்; நகைச்சுவையூட்டும் ஒரு கருத்தின் மூலம் அந்த இகழ்ச்சிக் கூற்றைப் பயன் அற்றதாக ஆக்குவதும், எதிரியின் பெருமைக்கு ஏதுவானவற்றின் போலித் தன்மையைப் புலப்படுத்தி, கண்ணுடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறிவதை உணர்த்துவதும், கற்றறிந்தார் தம் தருக்கை அவர் கற்றறிந்த நூல் துணே கொண்டும், அவர் கூறும் தத்துவப் பொருளின் குறையினே விளக்கியும் மடக்குவதும், தமது கொள்கையைக் குறைகூறுவோருக்கு மறுப்புரைக்குமிடத்து அண்ணு கையாண்ட முறைகளாகும்.

அண்ணு அவர்கட்கு உறங்குகிற சில மணி நேரம் தவிர ஓய்வு என்பது இலக்கிய மேதைகளின் நாடகங்களேயும் – சிறந்த எழுத்தாளர்களின் கதைகளேயும் படிப்பதே ஆகும். அதில் அவர் உவகை கொண்டதுடன், உலகத்தார் இயல்புகளே எல்லாம் நன்கு தெளிந்தார். அண்ணு அவர்கள் மற்றவர்களுடன் உரையாடும் போதும் அதில் அவர் ஆர்வங்காட்டியதுடன், மாற்றுக் கருத்துக்களேயும் இயல்பாக எடுத்துக் கொள்வார். மற்றவர் கருத்தையும் எளிதாக, நகைச்சுவைக்கு உரியதாக்கி, எல்லோரையும் மகிழ்ச்சி கொள்ள வைத்திடுவார்.

ஒரு இலட்சியவாதி – தான் மேற்கொண்டுள்ள நெடும் பயணத்திடையே – அதற்கான விடாமுயற்சியினிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றினும், அவற்றைப் பெரிதுபடுத்தாமல், அவையெல்லாம் காலப்போக்கில் மாறித் தெளிவடையும் என்னும் கருத்தில் செயற்படுவார்.

மக்கள் மனத்தைத் தன்பக்கம் திருப்புவதிலேதான் – ஜனநாயக நெறியிலே வெற்றி காண வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்திருந்த அண்ணு அவர்கள், மக்களிடையே ஒரு ஒருமித்த உணர்வும் கருத்தும் நாளும் வளர – பகையும் புகையும் நீங்க – வேற்றுமையும் வெறுப்பும் குறைய – வேற்றுமையில் ஒற்றுமை காணும் நெறியில் ஒற்றுமைப்படுத்தும் வழியை மேற்கொண்டார். நமது தாய்மொழி தமிழின் பெருமையும், அதைக் காக்கும் கடமையும், நாம் எல்லாம் தமிழர்கள் என்னும் இன உணர்வும், நமது உரிமையைக் காப்பதற்கு ஓர் இயக்கம் தேவை என்னும் தெளிவும் ஏற்படுத்தும் வகையில் அந்த ஒற்றுமைக்கு வழிகோலினுர்.

கருத்துக்களேத் தெளிவிப்பதில், அதன் அடிப்படையில் வாதாடுவதில் எத்தனே வேற்றுமைகள் இடம் பெற்ருலும், அந்தக் கருத்து வேற்றுமைகள் யாவும் தமிழ்ச் சமுதாயத்தைத் தெளிவு பெறச் செய்யவும் வாழ வைத்திடவும் துணேயாக வேண்டும் என்பதே அண்ணுவின் அவா.

உடைத்தெறிந்தார்

கவியரசு முடியரசன்

உடைத்தார் அறப்போர் தொடுத்தார் – அய்யா
உலகம் எதிர்ப்பினும் ஒருதனி நின்றே
—உடைத்தார்

படைத்தான் அழித்தான் காத்தான் என்றெலாம்
படித்தார் உரைத்தார் பழங்கதைச் சடங்கெலாம்
—உடைத்தார்

எத்தனே எத்தனேச் சாதி – அவை
என்றும் நிலேத்திடச் சாத்திர நீதி
பித்தரைப் போலினும் ஓதி – வரும்
பீடைகள் கேடுகள் யாவையும் மோதி
—உடைத்தார்

கற்பனே பற்பல கூவிப் – பல
கட்டுக் கதைகளே மெய்யெனத் தூவி
விற்பனே செய்தனர் பாவி – அந்த
வெற்றுரை யாவையும் செற்றிடத் தாவி
—உடைத்தார்

அழகுமரம் சுமந்ததெல்லாம் நம் ஊஞ்சல்கள்

கலைஞர் குடியரசு

கனவுகளைத் துரத்துகின்றேன்! புகழை நட்ட
கல்லறையை மறுபடியும் ஆராய் கின்றேன்
மனத்தடியில் பனித்துளிகள்! இறந்த கால
வடிவத்தில் எத்தனையோ அஜந்தா சிற்பம்
இனவுணர்வின் எடுப்பான தோற்றம்! இன்ப
இலக்கியத்தின் வாடாத மலர்கள்! அண்ணா
வனக்குயில்போல் கூவுகின்ருர் அவரின் பாட்டால்
வளுந்திரத்தில் எத்தனையோ திருவி ழாக்கள்!

மூலதனம் இல்லாத மக்க ளா.நாம்
மூடுபனி போர்வைகளை உதறித் தள்ளிக்
காலத்தைப் பொற்காலம் ஆக்கி னேமே
கதிரவனின் ஒளியைவிட ஒளிவிட் டோமே
ஞாலத்தில் நாம்தானே முதல்ம லர்கள்
ஞானத்தை நாம்தானே வினியோ கித்தோம்
ஆலமரம் போலிருந்தார் அண்ணா! அந்த
அழகுமரம் சுமந்ததெல்லாம் நம்ஊஞ் சல்கள்!

இப்போது நிலைஎன்ன? நமதண் ணுவின்
இதயத்தை எழுப்பிடவா! நமது கண்ணின்
உப்பளத்தைப் பார்வையிட வரமாட் டாரா?
ஓய்வென்ன அவருக்கு இனிமேல்? இங்கே
சப்பைகளின் அரசாங்கம் ஓர்பக் கத்தில்
சண்டாளத் துரோகிகளோ மறுபக் கத்தில்
கொப்பறையில் நம்நாடு! தெளிவில் லாமல்
குழம்புகின்ற நம்மக்கள்! வரமாட் டாரா?

பொடியான வகுப்புரிமை! பெரியார் என்னும்
போர்க்கோழி கொள்கைக்குக் கழுத்த றுப்பு!
நடிக்கின்ற நரவேட்டை! நம்மைச் சுற்றி
நட்டுவைத்த சதிவலைகள்! இவ்வி டுக்கில்
கடிக்கின்ற பொய்வழக்கு! இவ்வி யக்கம்
கரையாதா எனத்துடிக்கும் மதமே கங்கள்!
விடியாதா நல்லிரவு! அண் [illegible]
விழிகளுக்கும் ஒ [illegible]

அந்தஇரு கண்களெல்லாம் அணைவ தில்லை
அவ்விழிக்கு மற்ருேர்பேர் கலைஞர் என்பேன்
வந்துபோகும் பால்நிலவே! அறிஞர் அண்ணா
வரலாற்றை புதுப்பிப்பாய் கலைஞர் மூலம்
சுந்தரனே! இந்நாட்டை எழுத்தால் பேச்சால்
சுறுசுறுப்பாய்க் கவர்ந்தவனே! நீபி றந்த
இந்தநாளில் திருக்குவளை மலரைச் சூடி
இனவுணர்வில் மொழியுணர்வில் துள்ளு கின்ருேம்

போர்க்கால வேகங்கள்! தியாகத் தீயில்
புடம்போட்ட புதுமலரின் மகரந் தங்கள்!
கூர்மழுங்கா கூன்விழாத நிமிர்ந்த கொள்கை
கொண்டிருக்கும் கழகத்தைக் காப்போம்! அண்ணா
நீர்குமிழித் தலைவரில்லை அவரின் தம்பி
நிலைகுலையும் கவர்ச்சிஇல்லை! கலைஞர் எங்கள்
வேர், உயிர்த்தீ— அறிஞரேறே இனிமேல் நாங்கள்
வீதிவலம் வருகின்ற சரித்தி ரங்கள்!

கருத்து வேற்றுமை — கொள்கை மாறுபாடு — யாவும் தமிழ்ச் சமுதாயத்தின் அறிவுப் பயிருக்கு உரமாகி, 'இன ஒற்றுமை' என்னும் விளைச்சல் பெருகி 'தமிழ்நாடும் மக்களும் உயர்ந்திட வேண்டும்' என்பதே அவரது குறிக்கோள். ஒற்றுமையில் வேற்றுமை கண்டறிவது அறிவுத் தெளிவுபெறத் துணையாவது. ஆனல் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே சமுதாய வாழ்வுக்குத் துணை என்பது அவர் எண்ணம்.

எனவேதான், அண்ணா அவர்கள் சமுதாயத்தினைச் சீர்திருத்தும் சுயமரியாதைக் கொள்கையிலும் பகுத்தறிவுக் கருத்துக்களிலும் உறுதிமிக்கவராக விளங்கியபோதிலும், மக்கள் நிலையில் எல்லோரும் பகுத்தறிவாளர்களாக ஆதல் எளிதல்ல என்பதைக் கருத்தில் கொண்டு, பெரும்பாலோர் ஏற்கக்கூடிய அளவும் வகையும் அறிந்து அதற்கேற்ப சீர்திருத்த வாதத்தை எடுத்து வைத்தார்.

சாதி வேற்றுமைக்கு ஆட்பட்டு ஏற்றத்தாழ்வு உணர்வுகட்கு இரையாகிக் கிடக்கும் மக்கள், அறியாமையோடு மூடநம்பிக்கையில் அழுந்தியிருக்கும் சமுதாயச் சூழ்நிலையில் உள்ள மக்கள், பலப்பல தெய்வங்களை வழிபடும் நம்பிக்கையோடு தலைவிதிக்கும் வினைப் பயனுக்கும் தமது உள்ளத்தில் இடம் கொடுத்திருக்கும் மக்கள், முயற்சியிலும் — வாழ்விலும் நம்பிக்கையற்று நலியும் நிலையிலுள்ள மக்கள் — அவர்தம் மன நிலையில் இருந்து ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் அளவுக்குத் தெளிந்தாலே போதும் என்று கொண்டு, அதை அவர்தம் உள்ளத்தில் நாட்டுவதே ஒரு பெரும் சாதனை என்று தெளிந்து, அதையே தமது சமுதாய சீர்திருத்தக் கொள்கையின் அடிப்படையாகக் கொண்டார்.

சாஸ்திரப்பொய்மைகளை, சடங்குகளின் பயனற்ற தன்மையை, இதிகாச புராணக் கற்பனைகளை, மூடப் பழக்க வழக்கங்களை, பேய் பூதம் பிசாசு போன்ற கண்மூடித்தனங்களை, புரோகிதப் புரட்டினை தமது எழுத்திலும் பேச்சிலும் விளக்கியுரைத்தார்.

தாம் இவற்றைக் குறித்து விளக்குமிடத்து — கடவுள் மறுப்பு நோக்கத்துடன்தான் இவ்வாறு கூறப்படுகிறது என்று எண்ணி, இது நாத்திகம் — கடவுள் நிந்தனை என்று யாரும் அஞ்சிடவோ வெறுத்திட்வோ இடமில்லாதவாறும், மேலும் அவர்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் தமது கொள்கையைப் பரப்பலானர்.

தந்தை பெரியார் அவர்கள் எந்த சாதி வேற்றுமை ஒழிந்து சமய நம்பிக்கை நொறுங்கி, மூட நம்பிக்கைகள் அழிந்தால் தான், தமிழர் சமுதாயம் தலை நிமிரும் என்று கண்டு, கடவுள் பெயரால் சொல்லப்பட்ட வேத ஆகம இதிகாச புராண வருணுசிரமம் அத்தனையையும் 'கடவுள்' எண்ணத்தோடும் சேர்த்துத் தகர்க்க முற்பட்டாரோ, அந்த நோக்கத்தை — பெரும்பாலோரிடையே இடம் பெறச் செய்ய நாத்திகம் நமது பாதை என்று ஆக்கிக் கொள்ளாமல், கடவுள் பெயரால் சொல்லப்பட்டவை உண்மையல்ல என்றும், நம்முடையவை அல்ல என்றும், நமது தமிழ் — திராவிட நாகரிகமே வேறு என்றும், அந்தக் காலத்து எண்ணங்கள் இந்தக் காலத்துக்கு ஒவ்வாதவை என்றும், அவற்றினும் மாறுபட்ட — உயர்ந்த நெறி உணர்த்தும் பழந்தமிழ் ஏடுகள் பலவென்றும், மேல் நாடுகள் வளர்ந்த வரலாறு இதுவென்றும், விஞ்ஞான வளர்ச்சியினல் உலகம் பெற்ற பயன் இதுவென்றும், பழமை நம்பிக்கையால் நமது இனம் வீழ்ந்த நிலை இதுவென்றும், பலப்பல வகையினுல் காரண காரிய விளக்கஞ் செய்தே பொதுமக்கள் சிந்தனையில் ஒரு மாற்றத்தை அண்ணா விளைவித்தார்.

குறிப்பாகக் கூறினல் — கடவுள் பற்றி மக்களிடம் பேசுவதால் ஏற்படும் பயனை விட — அந்த எண்ணத்தை மனிதன் கொள்ள ஏதுவாகச் சூழ்ந்துள்ள பல்வேறு நம்பிக்கைகளைத் தெளியவைக்கும் முயற்சியே எளிதாக மனமாற்றம் கொள்ளச் செய்திடும் என்பது அண்ணாவின் எண்ணம்.

மக்களிடம் மன மாற்றம் செய்ய விரும்பும் நாம், அதை ஒரு கடும் அதிர்ச்சி மருத்துவ முறையாக மேற்கொள்ளாமல், இயற்கை மருத்துவம் போன்ற எளிய முறையைக் கையாள்வதே ஏற்ற வழி என்பது அவரது துணிபு.

சமுதாயசீர்திருத்தம் வெற்றிபெற, தமிழ் மொழி இன உரிமைப் பாதுகாப்புக்கும் — அரசியல் பயன்படுத்தப் பட வேண்டும், அது மாறுபட்டு விடலாகாது என்றும் அவர் கருதினர்.

[illegible] ருளியல் [illegible]
[illegible] யாட்சி உ [illegible] ஆகியவை வெற்றிபெற — நாம் எடுத்து வைக்கும் எந்தக் கொள்கையையும் பெரும்பாலோர் முற்றிலும் ஏற்காவிடினும், கடும் எதிர்ப்பு உணர்வு கொள்ளக் காரணமாகக் கூடாது என்பது அண்ணாவின் முடிவான எண்ணமாகும்.

மேடையில் பேசுவது என்பது பேச்சாளர் மன நிறைவுக்காக அல்ல, கேட்பவர்கள் மன நிறைவுக்கும் பயன் கொள்வதற்குமே எனவும், பேசுபவர் ஒருவர், கேட்பவர் பல நூறு பேர், பலதிறத்தினர் நிலையினர் என்பதும் — பேசுவோர் கருத்தில் நிற்க வேண்டியது என்பது அவரது எண்ணம்.

பெரும்பாலோர் ஏற்றிடும் வகையில் தமது கருத்தை எடுத்து விளக்கும் முறை அறிந்தோர், தாம் கூறும் அனைத்துக்கருத்தையும் மக்கள் ஏற்காவிடினும், தாம் ஒரு பொது நோக்கத்தோடு வாதாடுகிருேம் என்னும் எண்ணத்தையாவது ஏற்படுத்தலாம். எல்லோரும் தமது கொள்கையை ஏற்காவிடினும், வெறுக்காமலாவது இருக்குமாறு பேசுவதே ஏற்ற முறை என்பது அவர் கண்டது.

அண்ணாவின் கொள்கைகளும், அவற்றைப் பரப்பும் முறைகளும், அவர் மக்கள் மன நிலையைத் தெளிந்த தன்மையாலே சிறந்தன.

அண்ணாவின் கருத்துக்கள் வடிவு கொண்டது அவரது ஆற்றல் மிக்க அறிவிலே மட்டுமல்ல, மக்களிடம் கொண்ட ஆழமான அன்பு உள்ளத்திலே என்பது நாம் உணர வேண்டியதாகும்.

மக்களுக்காகத் தொண்டு புரிய ஆர்வம் கொண்ட அண்ணா அவர்கள், ''தமது வாழ்நாளில் தாம் ஏற்ற ஒரே தலைவர்'' தந்தை பெரியார் தான் என்று போற்றி உரைத்ததற்கேற்ப அவரிடம் அன்பும் மதிப்பும் பூண்டு நின்றதைப் போன்றே மக்களிடம் கொண்டிருந்த பேரன்பினலும், கடமை உணர்வாலும், அவர்கட்கு பெரும்பாலோர்க்கு ஏற்ற மருத்துவம் எதுவெனத் தெளிந்து அதனை மேற்கொண்டார்கள்.

நோய் தீர்க்கும் நோக்கத்தில் தந்தை பெரியார்க்குத் துணையாகி, நோய் தீர்க்கும் மருத்துவ முறையில் மட்டும் ஏற்றதொரு முறை வகுத்துக் கொண்டார் அண்ணா!

மக்கள் வாழ்விலே — எண்ணத்திலே மாற் [illegible] — மக்களை [illegible] ர் — [illegible] து இ [illegible] சியதை நிறைவேற்றும் வழி கண்டார்.

அண்ணாவின் போற்றப்படும் அறிவாற்றல், அவரது பெரிய இதயத்தின் பேரன்புத் திறத்தாலே மலர்ந்து நின்று மணம் பரப்பியது.

வாழ்க அண்ணாவின் இதயம்!
வளர்க அவர்தம் இலட்சியம்!

தந்தையைப் பற்றி அண்ணன்..

விசித்திர வைதீகர்களை வீதி சிரிக்கச் செய்தார் சாக்ரடீஸ். உலகுணராதவர்களுக்கு அது உருண்டை என்று உரைத்து உதைபட்டார் கலிலியோ! வைதீகத்தின் மடமையை வாட்டினர் வால்டேர். மக்கள் மன்றத்துக்கு மதிப்புத் தர வேண்டும் என்ருர் ரூசோ. வேதப்புத்தகத்தை விற்று விபசார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தனர் விக்ளிப், ஜிவிங்லி, மார்ட்டின் லூதர் போன்ருேர். அடிமைகளை விடுவித்தார் ஆபிரகாம் லிங்கன்; முதலாளியின் கொடுமையை எடுத்துரைத்தார் காரல் மார்க்ஸ். அவர்களுக்காகப் போராடினுர் லெனின். சீனரின் சிறுமதியைப் போக்கினுர் சன்–யாட்–சென். துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால். இறைவன் பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்க வைத்தார் இங்கர்சால். பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னுட்ஷா. வாழ்க்கையிலே வாட்டம், வேதனை, வறுமையின் கொடுமை, வஞ்சகத்தின் ஆட்சி — இவைகளிருப்பதைப் படம் பிடித்துக் காட்டினர் கோர்த்தி, டர்கினுவ், டாஸ்ட்டாவ்ஸ்கீ, இங்களேர் போன்ற எண்ணற்றவர்கள்.

இங்கு ஜாதிக்குள் ஜாதி— குலத்துக்குள் குலம் ஒன்றுக்கொன்று சச்சரவு என்ற பேதத்தின் பெருங்கூத்தைப் பார்க்கிறீர்கள். மற்ற இடங்களிலே உழைப்புக்குப் பெருமை. இங்கு உயர்ந்தோர் உழைக்கலாகாது என்பதுதான் நியதி. மற்ற இடங்களிலே பழமைக்குக் கல்லறை; இங்கே புதுமைக்குச் சித்திரவதை.

உலக வரலாறு முழுவதும் தேடினுலும், இதற்கு ஈடான வேருேர் கொடுமையைக் காண முடியாது. இங்கே நடக்கும் இந்தக் கொடுமைகளைக் கண்டிக்க, எடுத்துக்கூற, எதிர்க்க தந்தை பெரியார் ஒருவர்தானே இருக்கிருர்.''

The Commanding personalities of our Anna!

அண்ணாவின் ஆளுமைகள்

ஒரு இசை வாணனுக்கு குரல் எப்படி இயற்கையிலேயே அமைந்து விடுகிறதோ அப்படித்தான் ஒரு தலைவனுக்கு ஆளுமைச் சக்தியும் (Commanding personality) இயற்கையிலேயே அமைந்து விடுகிறது.

என்னதான் குரல் இனிதாக இருந்தாலும் அவன் தினசரி பாடிப்பாடி குரலைப் பக்குவப்படுத்திச் சங்கீதம் பயின்றால்தான் அவன் இசைவாணனாக முடிகிறது! அரசியல் தலைவனும் அப்படித்தான் — தனக்குக் கிடைத்துள்ள ஆளுமைச் சக்தியை கல்வி அறிவாலும், கேள்வி ஞானத்தாலும் மேலும் விருத்தி செய்து கொண்டு விடுகிறான்.

ஆளுமை என்றால் என்ன? ஆறடி உயரத்தில் ஆஜானுபாவமான தோற்றமா? அல்லது விரிந்த நெஞ்சும் வீறுகொண்ட பார்வையுமுள்ள புஜபல பராக்கிரமமா? இல்லை! ஆளுமை என்பது ஒரு சக்தி. அதுவும் அருவமான (Abstract) சக்தி. அதைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும் முடியாது; நுகர்ந்துபார்த்துப் புரிந்து கொள்ள முடியாது. [illegible]ட்டி விட்டால் குட்டிக் கர்ணம் போடும் ஒல்லியான சரீரத்தில் கூட அந்தச் சக்தி குடிபுகுந்து விடுவதுண்டு.

அறிவாண்மை மலிந்த உள்ளம், கலை நிறைந்த முகம், ஒளி பொருந்திய விழிகள், ஆழமான சிந்தனை, அமைதியான போக்கு, நிதானமான முடிவுகள் — இவைகள்தான் ஆளுமைச் சக்தியுள்ள ஒரு தலைவனுக்கு அடையாளங்கள் என்று நூலறிவாளர்கள் கூறுகிறார்கள். இந்தக் கூற்றுகளுக்கு முற்றிலும் இணக்கமானவராக அறிஞர் அண்ணா இருந்ததால்தான் அவர் ஒரு அபூர்வமான ஆளுமைச் சக்தியுள்ள தலைவராக கடைசிவரை வாழ முடிந்தது.

அறிஞர் அண்ணாவின் ஆளுமைச் சக்திக்கு முடிசூட்டி வைத்தது — அண்ணா எதைச் சொன்னாலும் நமது நன்மைக்காகத்தான் சொல்வார் — என்று அவரது அன்பர்களும், நண்பர்களும், சகோதரர்கள் போன்ற தொண்டர்களும் அவர் மீது வைத்த நம்பிக்[illegible]

[illegible]களை தமிழகத்திற்கு வடித்துக்கொடுத்தார். அவற்றுள் மிக முக்கியமானது திராவிட நாடு பிரிவினைக் கொள்கை!

அந்தக் கொள்கையை நிலைநாட்டுவதற்காகவும், அந்தக் கொள்கையை மக்களுக்கும் மாணவர்களுக்கும் புரிய வைப்பதற்காகவும் அறிஞர் அண்ணா இருபதாண்டுகாலம் செலவு செய்தார். திராவிட நாடு வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும், நூல்கள், பத்திரிகைகள் வாயிலாகவும் மேற்கோள்கள் காட்டியும் விளக்கி மகிழ்ந்தார்.

திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை மிகப்பலர் புரிந்துகொள்ளாமல் எதிர்த்தும், மிகச் சிலர் ஆதரித்தும் வந்த காலத்தில் அறிஞர் அண்ணா ''நாட்டுப் பிரிவினையே நமது ஜீவ லட்சியம்!'' என்றார். காலப்போக்கில் அண்ணாவின் கொள்கை காங்கிரஸ் தலைவர்களின் உள்ளங்களையும் தொட ஆரம்பித்து விட்டது. ''அண்ணா சொல்வது பூகோள ரீதியாக உண்மையான கொள்கைதான்; வட ஆதிக்கத்தை சகித்துக்கொண்டு வாழ முடியவில்லை'' என்று அனைவரும் ஒப்புக்கொள்ளும் தருணத்தில் மத்திய அரசாங்கம் பிரிவினை தடைச் சட்டம் என்ற புதிய கட்டுப்பாட்டை அறிமுகம் செய்தது.

உடனே அறிஞர் அண்ணா கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும், காலத்தின் மறுமலர்ச்சியை மனத்தில் கொண்டும் — 'தி.மு.க. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு விட்டது' என்று பிரசடனப்படுத்தி விட்டார். அண்ணாவின் அறிவிப்பு காங்கிரஸ் ஆட்சியாளருக்கும், மற்ற எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் வியப்பையும் அதிர்ச்சியையும் தந்தது. 'பிரிவினைப் பேய்' என்று தி. மு. க.வை வர்ணித்த காங்கிரஸ் தலைவர்கள்தான் அண்ணாவின் இந்த அறிவிப்பை வரவேற்க வேண்டியவர்கள். ஆனால் அவர்கள்தான் அண்ணாவைக் 'கோழை' என்று கேலிசெய்தார்கள்.

ஆனால், — அறிஞர் அண்ணா இப்படிச் செய்யலாமா — என்று வருத்தப்பட உரிமை கொண்ட லட்சக்கணக்கான அண்ணாவின் சகோதரர்கள் 'அண்ணா நல்லதையேதான் நினைப்பார்; நல்லதையேதான் செய்வார்'— என்று அண்ணாவின் தீர்ப்பை ஜீரணித்துக்கொண்டார்கள். எந்தத் தனி ஒரு தொண்டனும் அதற்காக அண்ணாவை விமர்சனம் செய்யவில்லை. கட்சி மேடைகளில் வசனங்களாலோ, வாள்வீச்சுப் போன்ற பேச்சுக்களாலோ ''திராவிட நாடு பெற முடியாது; நாட்டில் ஒரு ரத்தக் களறி ஏற்பட்டுத் தீரவேண்டும்'' என்று தீப்பிழம்பாகப் பேசியவர்கள் கூட அண்ணாவின் அறிவிப்புக்கு முன்னே சுருண்டு போனார்கள். இது அண்ணா பெற்றி[illegible]

அறிஞர் அண்ணா கொஞ்ச வயதிலேயே அறிவாளர் என்ற பட்டத்தைப் பெற்றவர். அண்ணாவின் ஆளுமை, அவர் சேலத்தில், நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றக் கோரியபோதுதான் முதல் முறையாக அரும்பிக் காட்டியது. அந்த மாநாட்டில்தான் அண்ணாவின் அரசியல் பிரவேசம் அவரது சுவடுகளைக் கட்சியில் அழுத்தமாகப் பதிக்கத் தொடங்கியது. அண்ணாவின் அரசியல் பிரவேசமே நீதிக் கட்சிப் பிரமுகர்களுக்கு அக்னிப் பிரவேசமாக முடியும் என்று அவர் துளியும் எதிர்பார்க்கவில்லை. அண்ணா, அவரது முப்பத்தி ஐந்தாவது வயதிலேயே நீதிக் கட்சித் தலைவர்களுக்கு சிம்ம சொப்பனமாகத் தோன்றத் தொடங்கிவிட்டார்.

நீதிக் கட்சி, சில உன்னதமான கொள்கைகளுக்காக உருவானது; ஆனால் அதைச் செயல்பட விடாமல் தடுப்பது கட்சியில் உள்ள செல்வந்தர்கள்தான் — என்று புரிந்து கொண்ட அண்ணா அவர்கள் அவர்களை வெளியே தள்ளிவிட யூகம் செய்தார். பணக்காரனிடம் பணம் கேட்டால் தந்துவிடுவான்; வேலை கேட்டால் கொடுத்துவிடுவான் என்று யூகித்துக்கொண்ட அண்ணா, எதைக் கேட்டால் பணக்காரன் தரமாட்டானோ அதைக் கேட்க முன்வந்து விட்டார்.

நீதிக் கட்சியில் உள்ள தலைவர்கள், வெள்ளையர்களிடம் தாங்கள் பெற்றுக்கொண்டிருக்கிற பட்டம் பதவிகளையெல்லாம் துறந்து விடவேண்டும் — என்று அண்ணா பல்லவியைத் தொடங்கினார்.

ராவ் பகதூர், திவான் பகதூர், ராவ் சாகேப், கௌரவ மாஜிஸ்ட்ரேட்...வெள்ளையரிடமிருந்து பெற்ற இதுபோன்ற பட்டங்களையெல்லாம் இழந்துவிடவேண்டும்; தன் பெயருக்குப் பின்னால் உள்ள ஜாதிப் பெயர்களைக் குறிக்கும் பட்டங்களை விட்டொழிக்க வேண்டும்—என்று அண்ணா தீர்மானம் கொண்டு வந்தார். அன்றுதான் அண்ணாவின் ஆளுமை வெளிப்பட்டது. ஆம்; சுயசிந்தனையாளரான பெரியார், மனமகிழ்ந்து அண்ணா கொண்டுவந்த தீர்மானத்திற்கு அண்ணாதுரை தீர்மானம் என்றே பெயரிட்டுவிட்டார். நாட்டவர் அனைவரையும் கவர்ந்த வெண்தாடி வேந்தரான பெரியாரை அண்ணாவின் ஆளுமை வசப்படுத்திக்கொண்டது. அண்ணாவின் அந்த ஆளுமை — நீதிக் கட்சியை ஆகர்ஷண சக்திகளாக இருந்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த செல்வந்தர்களுக்கு 'வந்தனம்' பாடி அனுப்பிவைத்துவிட்டது. அதுமுதல் அண்ணா பெரியாரின் போர்வாளாகி விட்டார்.

பெரியாரை தலைவராகவும், அறிஞர் அண்ண[illegible]கவும் [illegible] காலப்போக்கில் சில வாசல்கள் ஏற்பட்டன.

''ஒரு கட்சிக்குக் கொள்கை மட்டும் போதாது; உரிமையோடு கருத்துப் பரிமாறிக் கொள்ளும் ஜனநாயகமும் வேண்டும்''

என்ற குரல் கட்சிக்குள் ஓங்கி ஒலித்தது. அந்தக் குரலுக்கு அறிஞர் அண்ணாவே மானசீகமான தலைவராகத் திகழ்ந்தார். அதைத் தொடர்ந்து கட்சிக்குள் கிசுகிசுப்புகள் பெருத்துவிட்டன. அறிஞர் அண்ணா தக்க தருணம் பார்த்திருந்து நாடு தழுவிய ஒரு முக்கியமான பிரச்சனையில் பெரியாருக்கு மாறுபட்ட கருத்தை பகிரங்கமாகப் பத்திரிகையில் வெளியிட்டார். அதுதான் — 'ஆகஸ்ட் 15 அனைவருக்கும் சுதந்திர நாள்' — என்ற கருத்து.

பெரியாருக்கு, அண்ணாவின் இந்தக் கட்டுரை எரிச்சலையூட்டியது. அண்ணாவின் மீது தூஷணைகள் வீசப்பட்டன.

''வெள்ளைக்காரன் ஜெயிப்பதற்கு பட்டாளத்திற்கு ஆள் சேர்த்த அண்ணாதுரை, இப்போது ஆகஸ்ட் 15 சுதந்திர நாள் என்பதா?'' என்று கூட விமர்சனம் செய்தார்கள்.

அறிஞர் அண்ணா இந்தச் சந்தர்ப்பத்தை முற்றிலுமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

வெள்ளையர்கள் வெல்லவேண்டுமென்று தான் விரும்பியது சர்வாதிகார வெறிபிடித்த இட்லர் தோற்க வேண்டும் என்பதற்காகத்தான் என்றும், இட்லர் ஒரு ஆரிய புத்திரன் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களின் ஆணவத்தை ஒழிப்பதற்காகத்தான் என்றும் அண்ணா பல இடங்களில் அருமையாக விளக்கமளித்தார். வெள்ளையரை அந்தப் போரில் எதிர்ப்பவர்கள் நாஜிகளின் ஆட்சியை வ[illegible] வேற்கும் ஜனநாயக விரோதிக[ள்] என்பதையும் அண்ணா குற்றம் சா[ட்]டக் கூச்சப்படவில்லை!

இந்தப் பூசலுக்கு அண்ணா அளித்[த] விளக்கம் அறிஞர் அண்ணாவை 'வெள்ளைக்காரர் தாசர்' என்று இழிவாகப் பேசிக்கொண்டிருந்தவர்களும், மாண[வ]வர் பெரும்படையினரும் அண்ணாவின் உயர்ந்த ஆளுமையைப் புரிந்து கொள்ள உதவியது.

அறிஞர் அண்ணா, தொலைநோக்குத் திட்டம் தீட்டி அமைதியாகச் செயலாற்றும் சிறந்த மதியூகி!

சங்கத்தைக் கழகமாக்கினார்; பின் கழகத்தைக் கட்சியாக்கும் திட்டத்தோடு திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை நிர்மாணித்தார். அண்ணாவுக்கு அப்போது வயது 40 (1909-1949). தனது நாற்பதாவது வயதுக்குள் தமிழரின் உள்ளங்கள் அனைத்திலும் ஒரு தலைசிறந்த அறிஞர் என்ற முத்திரையைப் பதித்துக்கொண்டு விட்டார். சி. என். அண்ணாதுரை மறைந்து, அறிஞர் சி. என். அண்ணாதுரை மறைந்து, அறிஞர் அண்ணா என்று சொல்லும் காலம் நாட்டில் நீக்கமற நிறைந்து விட்டது.

திராவிடர் கழகத்திற்கு பிராமண அல்லாதார் இயக்கம் என்றும், பெரியார் இனவெறி கொண்ட கும்பலை வளர்த்து வருகிறார் என்றும், பிராமணர்கள், பக்தர்கள் வாழுமிடமெல்லாம் பெயர் பரவியிருந்தது. அண்ணா அவர்களோ; தான் தொடங்கிய கழகத்திற்கு திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று வைக்காமல் திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்தார். அதற்கு கடற்கரைக் கூட்டத்தில் விளக்கமளித்த அண்ணா அவர்கள், இந்தக் கழகம் திராவிடர்களுக்காக மட்டுமின்றி திராவிட நாட்டு நலனுக்காகவும் பாடுபடும். "D. M. K. is not only for Dravidians; but also for Dravidanadu" என்று ஆங்கிலத்திலேயும் சொன்னார்.

தி. மு. க. விலுள்ள பிராமண எதிரிகள் கூட — 'அண்ணா நல்லதையே சொல்லுவார்; நல்லதையே செய்வார்; இனிமேல் தனிப்பட்ட பிராமணர்கள் நமக்கு விரோதிகள் அல்லர்'' என்று தலை அசைத்து விட்டனர். இதைவிட அண்ணாவின் ஆளுமைக்குவேறு அத்தாட்சி வேண்டுமா? பிராமணர்கள் கூட, தங்களிடமுள்ள மௌடீகத்தை உதறித் தள்ளிவிட்டு தி.மு.க.வில் உறுப்பினராகலாம் என்றும் அனுமதி வழங்கினார்.

இப்படி — அண்ணா எதைச் செய்தாலும், எதைப் பேசினாலும் அதில் கபடம் இருக்காது; தன்னலம் இருக்காது; கட்சி நலனுக்காகத்தான் அண்ணா செய்வார் — என்று அவரது இளம் சகோதரர்களை நூற்றுக்கு நூறு நினைக்க வைத்தது அவருக்கிருந்த ஆளுமைச் சக்திதானே தவிர வேறு எந்தச் சக்தியும் அல்ல!



அஞ்சா நெஞ்சன் அழகிரியுடன்
தந்தை பெரியார்...

பெரியார், அண்ணா பிறந்தநாள் வாழ்த்துக்கள்

Phone: 34571

G. P. மருத்துவமனை

(ஸ்தாபிதம்: 1953)

1/10, சத்தி ரோடு, கோ்யமுத்தூர் - 641012

மருத்துவத்துறையில் சிறந்த சேவை செய்துவரும் இந்த மருத்துவமனையில்:

வெளி நோயாளிப் பிரிவு (Out Patient)
உள் நோயாளிப் பிரிவு (In Patient)
எக்ஸ்ரே பிரிவு (All Types X-Rays)
இருதய பரிசோதனை (E C. G.)
ரண சிகிச்சை (Surgery)
பிரசவ விடுதி (Maternity Ward)
குடும்பக் கட்டுப்பாடு நிலையம் (Family Planning Centre)
குழந்தைகள் நலப் பிரிவு (Child Health Care)
கண் சிகிச்சை (Eye Treatment)
எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு (Ortho Sect.)

மணி நேரமும் தொடர்ந்து வைத்திய சேவை செய்யப்படுகிறது.

டாக்டர்கள் சீட்டின் பேரில் ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் கிடைக்கிறது.
Antirabies — Vaccine Available.

பெரியார், அண்ணா பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

பிரைட் நிக்கல்—
பிரைட் குரோமியம்
ஹார்டு குரோமியம்

திறமையான, நவீன முறையில் எல்லாவிதமான 'எலெக்ட்ரோ பிளேட்டிங்' வேலைகள் நீண்ட கால உத்தரவாதத்துடன் குறித்த காலத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கும் நிறுவனம்.

போன்: 34954

முருகதாஸ் எலெக்ட்ரோ பிளேட்டிங் ஒர்க்ஸ்,

137, பட்டேல் ரோடு,
கோவை-641 009.

...ராமதாஸ்



தயாரிப்பாளர்கள்:
பீ.கே.ஆர். பேர்ப்யூமரி
போன்: 25283 • தந்தி: BEEKEYAAR

M/s. பாலு அண்டு கம்பெனி

37, செந்தில் ஆண்டவர் வீதி,
தனலட்சுமி காலனி, வடபழனி,
சென்னை - 600 026.

பெரியார், அண்ணா பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உயர்தரமான அலுமினிய சர்கிள்கள் பாத்திர, உற்பத்தி, விற்பனையாளர்கள்

உரிமையாளர்: எஸ். கே. பெருமாள்

S. K. P.
மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்

9|39 C, சுப்ரமண்யம்பாளையம் ரோடு
ஞானம்பிகா மில்ஸ் (P.O.)
கோயமுத்தூர் - 641029.

வகுப்புவாதிகள்

-இலயவன்-

'**வ**குப்புவாதிகள்' என்ற வர்ணனை இன்று அரசியலில் ஒரு சாதாரண நிகழ்ச்சி! கட்சிகள் அவதூறுகளை அள்ளி வீசும்போது — 'வகுப்புவாத அர்ச்சனை' அதில் ஒரு முக்கிய பகுதி! **ஆனால் உண்மையான வகுப்புவாதிகள் கட்சிகளைக் கடந்தவர்கள்!** அவர்கள் வகுப்புவாத உணர்வுகளை மூச்சுகளிலே சுவாசிக்கிறார்கள்! ரத்தங்களிலே ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள்!

இந்த வகுப்புவாதிகளில் சிலர்—இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் தேசியப் போர்வை போர்த்தியிருந்தார்கள்! இந்திய விடுதலைக்குப் பின்பு பல்வேறு துறைகளிலும் தங்களைப் பலப்படுத்திக்கொண்டார்கள்! வகுப்புவாத உணர்வுகளை அவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் வாரிக்கொட்டுவார்கள்! இந்த வகுப்புவாதிகள் 'ஆதிக்கம்' செலுத்தும் ஒரு முக்கியமான துறை — பத்திரிகைத்துறை! அங்கே வகுப்புவாதம் வேரூன்றிவிட்டது மட்டுமல்லாமல் - காய்த்துப் பழுக்கவும் ஆரம்பித்துவிட்டது!

1956-ம் ஆண்டு! திருச்சியிலே திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு நடந்தது! அந்த மாநாட்டிலே அறிஞர் அண்ணா, தி.மு.க.வைச் சாமானியர்களின் கட்சி என்று கூறினார்! அப்போது அண்ணா, "சென்னையிலே— மவுண்ட் ரோட்டிலே— சாலையோரத்திலே நடந்து செல்லும் போது—உயரமான "மகா விஷ்ணு"- 'இந்து' பத்திரிகையின் கட்டிடத்தை 'ஒருமுறை நிமிர்ந்து பார்க்கிறேன்! **"இதையா நாம் எதிர்க்கிறோம்?"** என்று நினைக்கும்போது ஒரு வினாடி எப்படியோ தோன்றுகிறது! இருந்தாலும் நம்மாலும் முடியத்தானே செய்கிறது என்று எண்ணும்போது—ஆறுதல் வருகிறது — தொடர்ந்து நடக்கிறேன்" என்று குறிப்பிட்டார்!

அண்ணா மேலே உள்ளபடி குறிப்பிட்டு 23 வருடங்கள் ஆகிவிட்டன! தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் வேறு ஒன்பது ஆண்டு இருந்துவிட்டது! என்ன பயன்? 'இந்து' மித்திர பேதத்தை விட்டபாடில்லை!

"விசாரணைக் கமிஷனின் பார்வைக்கு வந்துவிட்ட கலைஞர் வெளியிலே போய் மக்களைச் சந்திக்கலாமா?" என்று 1976-ல் தலையங்கம் எழுதியது! ஆனால் இந்த நியாயத்தை தி.மு.க.வைத் தவிர மற்றவர்களுக்கு 'இந்து' வழங்கவில்லை! காரணம், இது ஒரு வகுப்புவாதம்!

ஜனதாக் கட்சியின் முதுகெலும்பு போன்ற 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'— இந்திரா காந்தி — அ.தி.மு.க. இணைப்புக்கு மானசீகமான ஆதரவைத் தந்து பார்த்தது! காரணம், வகுப்புவாத உணர்வுகள்!

'தினமணி' ஆசிரியரின் பேனாவில் சஞ்சீவரெட்டியைச் சாடும்போது அனல் பறக்கிறது! ஆனால் அது மொரார்ஜி விவகாரத்தில் 'மௌனம்' சாதிக்கிறது!

'தி.மு.க.வுடன், இந்திரா காந்தி தேர்தல் உறவுகொள்வதை விரும்புகிறார்' என்ற செய்தி 'தினமணி'யின் ஏழாவது பக்கத்தில் வருகிறது! ஆனால் எம. ஜி. ஆர். அழைப்பின் பேரில் மூப்பனார் அவரைச் சந்தித்து காலைச் சிற்றுண்டி அருந்திய விபரம் முதல் பக்கத்தில் வந்தது! இதற்குப் பெயர் என்ன?

பெரிய பத்திரிகைக்காரர்களுக்கு அகில இந்திய அளவில் இந்திரா ஒரு சர்வாதிகாரி! அவசர நிலைக்குக் காரணமானவர். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அவரது அரசியல் உறவுகள் அ.தி.மு.க.வுடன்தான் இருக்கவேண்டும்! காரணம், இங்கே எம்.ஜி. ஆர். ஆட்சி தொடர வேண்டும்! இதிலே அரசியல் எதுவுமில்லை என்றாலும் — இந்தப் பெரிய மனிதர்களின 'சுயநலம' உள்ளே குடிகொண்டிருக்கிறது!

'மெயில்' என்ற ஒரு ஆங்கிலத் தினசரி! எம்.ஜி.ஆர். அரசியல் எப்படியோ — அப்படித்தான் பத்திரிகை உலகில்! பிற்பட்ட வகுப்பினருக்கு வருமான வரம்பு நிர்ணயம் செய்து அ.தி.மு.க. அரசு பிறப்பித்த ஆணையை 'மெயில்' வரவேற்ற 'பாங்கு' இருக்கிறதே, அது ஒரு "அநாகரீகமான" அணுகுமுறை!

தமிழிலே ஒரு வாரப் பத்திரிகை! இந்த இதழில் வரும் தலையங்கம் அநேகமாக 'மை'யில் எழுதப்படுவதில்லை! 'நஞ்சில்'தான் எழுதுகிறார்கள்! கதைகளை அசிங்கத்தில் கோலமிடுவார்கள்! இந்த இதழ் தன்னை ஒரு 'இந்திரா' விசுவாசியாகக் காட்டிக்கொள்வதில் தவறியதில்லை! தி.மு.க. என்றால் ஒரு கசப்பு! காரணம், ரத்தத்திலே வகுப்புவாதத்தை ஏற்றிக்கொண்டதின் விளைவு!

சில மாலைப் பத்திரிகைகள்! வெறுப்புணர்ச்சி — 'இனவேட்கை' இவைகளையே மூலதனமாக வைத்து நடந்து வருகின்றன! கறுப்புப்பணம் துள்ளி விளையாட பத்திரிகை உலகம் இப்போது ஒரு வேட்டைக்காடு! இவர்களுக்கு செய்திகள் முக்கியமல்ல! இதழ்களின் விற்பனைக் கணக்குத்தான் முக்கியம்! மக்களுடைய பொதுவான அபிப்பிராயம் பற்றிக் கவலையில்லை! ரசிகர்களின் பாராட்டுக்கள்தான் தேவை! இங்கே வகுப்புவாத சக்திகள் தலைவிரித்து ஆடுகிறது!

தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது 'மவுண்ட் ரோடு' என்பது 'அண்ணா சாலை' என்று மாற்றப்பட்டது. 'அண்ணா சாலை' என்றுதான் அழைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டது!

ஆனால் 'இந்து' பத்திரிகை என்ன செய்தது? அந்த நாள்வரை 'Hindu', Kasturi Buildings, Mount Road, Madras-2 என்று இருந்த முகவரியை, 'Hindu', Kasturi Buildings, Madras-2 என்று மாற்றிக்கொண்டது! **'மவுண்ட் ரோட்' என்ற இடத்தை பத்திரிகையில் 'அண்ணா சாலை' என்று போடவில்லை!** காரணம், 'இந்து' பத்திரிகையில் "அண்ணாத்துரை பெயரா?" அதுவும் தினம் தினம் அச்சாகும் பத்திரிகையிலா? இது என்ன மனமுவந்து செய்யக்கூடிய செயலா? அதனால்தான் 'மவுண்ட் ரோட்'டை அப்படியே விட்டுவிட்டார்கள்! அதை 'அண்ணா சாலை' என்று அச்சடிக்க அவர்கள் விரும்பவில்லை!

இதுதான் வகுப்புவாதத்தின் அறிகுறிகள்!

அண்ணா சொன்னது போல தி.மு.க. இன்றும் — என்றும் சாமானியர்களின் கட்சிதான்! அதனால்தான் மேட்டுக்குடியினரால் இந்தப் பெரிய இயக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை! என்ன செய்வது? அவர்கள் மட்டும்தானா நமது சமுதாயம்? சாமானியர்கள் பெரிதும் அடங்கிய நமது சமூகத்தில் சாமானியர்கள் போராட்டம் ஒரு தொடர்கதைதான்! அந்தப் போராட்டம் வெறும் வர்க்கப் போராட்டம் மட்டுமல்ல! வகுப்புவாதிகளையும் எதிர்த்துத்தான்!

ஒரு கவிதையைப் போல் ஒலிக்கிறது...

பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுவதற்காக எங்களூருக்கு வந்தார். அன்று அவர் பேச இருந்த கூட்டத்துக்கு திரு. வி. எஸ். குழந்தை அவர்கள் தலைமைதாங்க இருந்தார்!

அண்மையில் மறைந்த திரு. வி.எஸ். குழந்தை பழம்பெரும் சுயமரியாதை வீரர். அழகிரியின் நெருங்கிய நண்பர். தி.க.விலிருந்து தி.மு.க. பிரிந்த நேரத்தில் குழந்தை அவர்கள் இரு பிரிவினர்க்கும் பொதுவாக இருந்தார். அண்ணா பேசுவதாக இருந்த கூட்டத்துக்குச் சில நாட்களுக்கு முன்னால், தந்தை பெரியார் பேசிய கூட்டத்துக்கும் அவரே தலைமை தாங்கினார்; இதுதான் அந்த ஊர் இயக்கத்தாரிடத்துப் பெரும் குழப்பமாக இருந்தது. திரு. வி.எஸ். குழந்தை அவர்கள் தி.க.வினர் கூப்பிட்டாலும் போகிறார்; தி.மு.க.வினர் கூப்பிட்டாலும் போகிறார்; உண்மையில் இவர் யார் பக்கம் உள்ளார்? ஏதாவது ஒரு பக்கம்தானே இவர் இருக்க வேண்டும்? என்றெல்லாம் தம்முள் வாதித்துக்கொண்டனர்.

அண்ணா பேச இருந்த கூட்டம் குருவிக்கரம்பையில் உள்ள வசந்த மண்டபத்தின் முன்னால் தொடங்கியது. மேடையில் அண்ணாவும் வி.எஸ். குழந்தையும் அமர்ந்திருந்தனர். வரவேற்புரை நிகழ்த்துவதற்காக மேடைக்கு வந்தார் ஒருவர்; அண்ணாவை அன்புடன் வரவேற்றுப் பேசிய பின்னர், கூட்டத்துக்குத் தலைமை தாங்க வந்திருந்த வி.எஸ். குழந்தையை வரவேற்றுப் பேசியபொழுது மிகவும் குறைபட்டுக்கொண்டார்.

சில நாட்களுக்கு முன்னால் பெரியார் பேசிய கூட்டத்துக்கும் தலைமை தாங்கியதைக் குறிப்பிட்டு, "தி.க.வினர் அழைத்தாலும் போய்விடுகிறீர்கள்! இப்படி யார் அழைத்தாலும் போவதா?" என உரிமையோடு வருத்தப்பட்டு வரவேற்புரையாளர் தமது உரையை முடித்தார். கூட்டத்தில் இருந்தவர்கள் கருத்தும் இதுவாகவே இருந்தது.

குழந்தை அவர்களோ தர்மசங்கடமான ஒரு மனநிலையில் தலைமை ஏற்று, அண்ணா பேசுவார் என அறிவித்தார்.

பேசுவதற்காக அண்ணா எழுந்தார். புன்முறுவலோடு குழந்தை அவர்களைப் பார்த்து, "கூட்டத்துக்குத் தலைமை ஏற்றிருக்கும் என் அன்புக்குரிய குழந்தை அவர்களே! அன்போடு யார் அழைத்தாலும், பாசத்தோடு செல்லும் பண்பாளர் குழந்தை அவர்களே!" என்றார். கூட்டத்தில் பெரும் கரவொலி! சிரிப்பு! அண்ணா அவர்கள் கூட்டத்தில் கூடி இருந்தவர்களையும் பார்த்து, வரவேற்புரையாற்றிவிட்டு மேடையில் அமர்ந்திருப்பவரையும் ஒருமுறை பார்த்து, "குழந்தைதானே? அன்போடு யார் அழைத்தாலும் பாசத்தோடு அது தாவிச்செல்லும்! தந்தையிடத்திலும் அண்ணனிடத்திலும் அது பாசத்தோடு மாறி மாறிச் செல்லத்தானே செய்யும்?" என்று கேட்டு ஒரு புன்முறுவல் புரிந்தார்.

அலைகடலின் ஆர்ப்பரிப்பு; சவுக்குத் தோப்பின் ஊடே வீசி வரும் காற்றின் சங்கீதத் தொகுப்பு; அந்தி சாயும் நேரத்தில் கடலோரத்திலிருந்து பறந்து செல்லும் ஆயிரம் ஆயிரம் பறவைகளின் பரபரப்பு அந்தக் கூட்டத்தில் எழுந்தது; கூட்டத்தார் மகிழ்ந்து கைதட்டினர். குழந்தையும் புன்முறுவல் செய்தவாறே தலையசைத்தார்!

சின்னஞ்சிறுவனாக அன்று நான் அந்தக் கூட்டத்தில் இருந்து கேட்ட அண்ணாவின் இந்த இனிய சொற்கள், இன்னும் என் நெஞ்சத்தில் ஒரு கவிதையைப்போல் ஒலிக்கிறது!

— டாக்டர் குருவிக்கரம்பை சண்முகம்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

அண்ணாவைப்பற்றி . தந்தை...

"பெட்டிச்சாவி என்னிடம் இருப்பதால் சரக்கு எதுவும் காணாமல் போய்விடாது. பத்திரமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஒரே ஆளிடம் தொடர்ந்தாற்போல் ஆண்டுக் கணக்காக சாவி இருந்தால் யாருக்கும் சலிப்பு வரத்தானே செய்யும். மேலும் வயது வந்த மகனிடம் பெட்டிச் சாவியைக் கொடுக்கவேண்டியதுதானே நியாயம். எனக்கும் வயது 70 தாண்டிவிட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச் சாவியை வைத்துக்கொண்டு அலைந்து திரிந்து பணியாற்றிக் கொண்டிருக்க முடியும்? ஆகவே பெட்டிச் சாவியை அண்ணாவிடம் கொடுக்க தீர்மானித்துவிட்டேன்."

(1948 ஈரோடு திராவிட கழக மாநில மாநாட்டில் பேசியது)

பெரியார், அண்ணு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்

K. P.
லட்சுமி அன் கோ.,
ராஜலட்சுமி அரிசி ஆலை
வஞ்சிபாளையம் S. Ry.
கோவை மாவட்டம்

Ameco

Manufacturers of:

Door Laces, Flexible, Velvet, Rigid
&
Aluminium Channels, Contour Tape,
Clips & Rivets

Ameco
Engineering Industries
2/404-A, Main Road, Beypore,
Calicut - 673 015

Grams : 'AMECO' Calicut

பெரியார், அண்ணு பிறந்தநாள் வாழ்த்துக்கள்

GDL. No. 11/79

தேவராஜ் ஜுவல்லரி
11,6, சருப்ப கவுண்டர் தெரு,
கோயமுத்தூர்-641001.

பெரியார், அண்ணு பிறந்தநாள் வாழ்த்துக்கள்!
எங்களிடம் முத்து, பவளம், திருச்சி கமலங்கள்
நியாயமான விலையில்
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

விஜயலட்சுமி
டைமண்ஸ்
உரிமையாளர்கள்:
P. ராஜன் P. மணியன்
670, பெரியகடை வீதி, கோவை—1.

பெரியார், அண்ணு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உங்கள் இல்லங்களை அழகுபடுத்த
ராயல் ஸ்டீல் பர்னிச்சர்
வாங்கி மகிழுங்கள்.
எங்களிடம்:

- கண்ணுடி பீரோ
- டேபிள்
- சேர்
- ரேக்
- ஸ்டூல்
- கட்டில்
- சோபா-கம்-பெட்

முதலியன
வண்ண வண்ண கலர்களில் குறைந்த விலையில்
உத்தரவாதத்துடன் கிடைக்கும்.
வினியோகஸ்தர்கள்:

ராயல் ஏஜன்ஸிஸ்
111, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை 641018
போன்: 32847

கிளை: 162, அவனுசி ரோடு, கோவை-18.

மறைந்த நாள் மரியாதை

-தோழன்-

வெப்பமும் குழப்பமும் வெகுவாக மண்டிக் கிடக்கும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தெளிவான கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் வகுப்பதற்காக, சென்னையில், இந்தத் திங்கள் 5-ம் நாளன்று தி.மு. கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டம் முடிவடைந்ததும் பத்திரிகை நிருபர்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அந்தக் காலத்து கிரேக்கர்கள் சந்தைத்திடல்களில் சாக்ரடீசை மடக்கிக் கேட்டதைப்போல், தங்களுக்குத் தோன்றியதையெல்லாம் கேள்விச் சரங்களாகத் தொடுத்து வீசுகிறார்கள். ''கோழி முந்தியா— முட்டை முந்தியதா?'' ''சக்தி பெரிதா — சிவம் பெரிதா?'' ''நெய்க்குத் தொன்னை ஆதாரமா— தொன்னைக்கு நெய் ஆதாரமா?'' என்பன போன்று வெகு சிக்கலானவைகளாக நாம் கருதும் கேள்விகளையொத்தவையாகவே பத்திரிகையாளர்கள் கலைஞரிடம் கேட்கிறார்கள்.

அழகாய் — அளவாய் அமைந்த தமது முத்துப்பல் வரிசை தெரிய முறுவலித்துக்கொண்டே அனைத்துக் கேள்விகளுக்கும் கலைஞர் பொறுமையாக — தெளிவாக— தயக்கமின்றி பதில் அளிக்கிறார்:

கேள்விகள் மூலம் வீசப்படும் வெம்மையைப் பொருட்படுத்தாமல் கலைஞர் அளிக்கும் குளுமையான பதில்களைக் கேட்டு ஒரு நிருபருக்கு வியப்பு பீறிட்டு வெளிப்படுகிறது.

''இப்போது நீங்கள் பெரிதும் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறீர்கள். இதற்கு ஏதாவது காரணம் உண்டா?''

கேள்வி கேட்டவர் வேகத்திற்கு ஈடு கொடுத்து பதிலும் தரப்படுகிறது.

''நான் எப்போதும் அப்படித்தான் இருப்பேன்!''

கலைஞரின் இந்தப் பதிலில்தான் பேரறிஞர் அண்ணாவின் பெருமையும் அருமையும் அடங்கிக் கிடக்கின்றன.

கலைஞரின் [illegible] அறிஞர் அண்ணா நிரந்தரமாக நம் முன் உறைந்துவிட்டார் என்பதற்கு நிறைவான சான்று தெரிகிறது; எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழன் யாருக்கும் தலை தாழாது தனித்தன்மை கொண்டவனாகவே இருப்பதற்கு உத்தரவாதம் கிடைக்கிறது.

எதிர்ப்படும் எத்தனைச் சோதனைகளும், இழைக்கப்படும் எத்தனைக் கொடுமைகளும், ஏவப்படும் எத்தனை அவதூறு அம்புகளும் கலைஞர் அவர்களை நிலைகுலையச் செய்ய முடியவில்லை.

காரணம், பேரறிஞர் அண்ணாவின் பெருமைக்குரிய தகுதிகள் அத்தனையையும் தமதாக்கிக் கொண்டவர் கலைஞர்.

பிளேட்டோவின் எழுத்துக்களில்தான் சாக்ரடீஸ் நமக்குத் தெரிவதைப்போல, இன்று கலைஞர் அவர்களின் உறுதியிலும் செம்மையிலும்தான் அறிஞர் அண்ணா அவர்களை சரியாக உணர முடியும்.

மாபெரும் மனித சக்தியைத் திரட்டிக் கட்டுப்படுத்தி வழி நடத்தும் தலைவர்கள் யாரும் எந்த நேரத்திலும், ''அவர்கள் அவர்களாகத்தான்'' இருக்க வேண்டும். இப்படி இருந்ததில்தான் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமை முழுவதும் அடங்கிக் கிடக்கிறது. யாருடைய 'இசத்'திற்கும் ஆட்பட்டுவிடாமல் தமிழன் தமிழனாகவே வாழ்வதற்கான அரசியல் வழிமுறைகளை வகுத்த முதல் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

பேரறிஞர் அண்ணாவை குழப்பமும் கொதிப்பு உணர்வும் ஒருநாளும் ஆட்கொண்டதில்லை. ஏனென்றால், இவைகள் இரண்டும் நாட்டில் எல்லை மீறிப் போவதற்கு முன்னால் இந்தச் சமுதாயத்தைச் செம்மைப்படுத்தி, ஜனநாயக அரசியலுக்குத் தகுதியாக்கிய மாபெரும் தலைவர் அவர்தான்.

பிரெஞ்சுப் புரட்சி, ருஷ்யப்புரட்சி என்று ஏட்டில் படித்தவைகளை மட்டுமே இலட்சியங்களாக்கிக்கொண்டு, அவைகள் பாணியிலேயே தனது கோபத்தை வெளிக்காட்டிக் கொள்வதற்குத் தயாராக நின்றிருந்த இளைஞர்களை ஜனநாயக அரசியல் முறைகளின்பால் திருப்பிய முதல் பெருமை, ஆசியாக் கண்டத்திலேயே அறிஞர் அண்ணா அவர்களுக்குத்

அறிஞர் அண்ணா அவர்களுக்கு முன்பு, இந்தியாவில் ஜனநாயகத் தத்துவங்களை விளக்கிச் சொல்லும் போதகாசிரி[illegible] இருந்திருக் [illegible] தோரோ, [illegible] எழுத்துக்களை எடுத்துக்காட்டி பதவுரை, பொழிப்புரை சொல்வதில்தான் அவர்கள் வல்லவர்களாக இருந்தார்கள். ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அகற்றி, அந்த இடத்தில் இங்கிலாந்தின் பாராளுமன்ற முறையைப் புகுத்துவதற்குத்தான் பண்டித நேரு, கிருஷ்ணமேனன் போன்ற ஜனநாயகவாதிகள் முயன்றார்களே தவிர, அந்த முறைகளை பாமர மக்களும் அறியும் வகையில் பட்டிதொட்டி எங்கும் பரப்பிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்குத்தான் உண்டு.

அது மட்டுமல்ல. 1949-ல் தி.மு. கழகத்தைத் துவக்கி அதனை முழுக்க முழுக்க ஒரு அரசியல் இயக்கமாக்கி, அதற்குத் தலைவராக பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்றுக்கொள்ளவில்லையானால், நாட்டில் ஜனநாயக சிந்தனைகள் வேரூன்றி இருக்காது என்பதை மனச்சாட்சி படைத்த தமிழர்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றபோது, காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள நிலப்பரப்புதான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதே தவிர, அதில் வாழும் மக்கள் பல்வேறு தேசிய இனத்தைச் சார்ந்தவர்களாகவோ, பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களாகவோ உரிய முறையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இதுபற்றிய சிந்தனையே இந்திய அரசியல்வாதிகளுக்கு, தமிழகத்திலிருந்து கொடுக்கப்பட்ட குரல் வலிவினால்தான் ஏற்பட்டது. இந்தியா பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டது என்பதை வற்புறுத்தியவர் தந்தை பெரியார் என்றாலும், அதனை அரசியல் ரீதியில் அணுகித் தீர வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் உணர்த்திய ஒரே தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

கிறிஸ்துவ மக்களைக் கொண்ட பகுதிதான் உலகத்திலேயே நாகரிகம் முதிர்ந்த இடங்களாக 16—17-ம் நூற்றாண்டு வரை ஐரோப்பியர்களால் கருதப்பட்டு வந்தன. இந்தத் தவறான நம்பிக்கையைப் போக்கி இந்தியா, சீனா, அரேபியா ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்[illegible]

வும் மனித நாகரிகங்களை எடுத்துக்காட்டி இடித்து அறிவுறுத்திய அறிஞர்களில் முதலாவதாக இன்று வால்டேர் கருதப்படுகிறான். அதே போல் மொத்த இந்தியாவின் முதிர்ந்த பண்பாடுகளுக்கு ஊற்றுக்காலாக இருந்தது— இருப்பது தமிழகம்தான் என்பதை அரசியல் ரீதியில் முதலில் அறிவுறுத்திய பெருமை பெற்றவர் அறிஞர் அண்ணா அவர்கள்தாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறக்காதிருந்தால், தமிழ்நாடும், தமிழர்களும் எத்தகைய இருட்படலத்தில் உழல வேண்டியிருக்கும் என்பதை இன்று சரியாக யாரும் உணராதிருக்கலாம். ஏனென்றால், அவரை நேரில் பார்த்து, அவருடைய கருத்துக்களையும் கொள்கைகளையும் விமரிசனத்திற்கு ஆளாக்கிய தலைமுறை மக்கள்தான் இன்று நிரம்பி காணப்படுவதால் அவருடைய பெருமை அவ்வளவாக அறியப்படவில்லை. ஏசுவின் பெருமைகூட அவர் மறைந்து சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகுதான் முழுமையாக உணரப்பட்டது. மத்தேயு, லூக்கா, மாற்கு, ஜான் போன்ற புனிதர்கள் ஏசுவின் போதனைகளை— வாழ்க்கையை, உண்மையான பற்றுதலோடு — உறுதியான வாசகங்களால் எழுதிக் காட்டிய பிறகுதான் கிறிஸ்துவென்றும், [illegible] உலக ம[illegible]

தனக்குப் பின்னால், தனது பணிகளைத் தொடர்ந்து செய்யவும், தனது கொள்கையைப் பரப்ப முன்வருவோரின் தலைவராகவும் புனிதர் பீட்டரை ஏசு கிறிஸ்துவே நியமித்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் பீட்டரின் கருத்துக்களைத் தொகுத்து எழுதியதுதான் மாற்கு எழுதிய 'சுவிசேஷம்.' மாற்குவின் எழுத்துக்கள்தாம் முதன் முதலில் கிறிஸ்துவின் பெருமையை எடுத்துக் கூறியதென்றும் சொல்லப்படுகிறது.

இதைப்போலவே, பேரறிஞர் அண்ணாவின் உண்மையான — முழுமையான — கற்பனைகள் கலக்காத சிறப்புக்களை புனிதர் பீட்டரைப் போல் கலைஞர் அவர்கள் நாட்டு மக்களின் இதயத்தில் எழுதிக்கொண்டிருக்கிறார்.

தனது தலைவனின் உண்மையான சிறப்புகள் ஓங்கி நிலைக்கவேண்டும் என்பதற்காக, அந்தக் காலத்து பெருமகன் பீட்டர் எடுத்துக் கொண்ட உழைப்பும், ஏற்றுக் கொண்ட இன்னல்களும் போலவே, அறிஞர் அண்ணாவின் உண்மையான இலட்சியங்களைப் பரப்புவதற்கும் செயல்படுத்துவதற்கும் இன்று கலைஞர் ஏற்றுப் போராடிக் கொண்டிருக்கிறார்.

கிறிஸ்து பிறந்த ஆண்டினையொட்டி வரலாற்றுக்காலங்கள் வகுக்கப்படுவதைப் போலவே, அறிஞர் அண்ணா பிறந்த ஆண்டினையொட்டி தமிழர்கள் தங்கள் வரவரலாற்றுக் காலத்தை வரையறுத்துக்கொள்ளும் காலம் விரைவில் ஏற்பட்டாலும் அது வரலாற்றின் நியதியாகவே அமையும்.

1917 ருஷ்யப் புரட்சிக்குப் பிறகுதான் புதுமை உலகமே உருவானதாக நினைப்பது கம்யூனிஸ்டுகள் பழக்கம். அதேபோல் தமிழர்கள் தங்களது தனித்தன்மையை அரசியல் ரீதியில் காப்பாற்றிக்கொள்வதற்கு முனைந்த காலம் அறிஞர் அண்ணா பிறந்த நாளிலிருந்து தொடங்குவதாகக் கருதிக் கணக்கிட்டால், அது சரியே என்பதை வருங்கால வரலாறு ஒப்புக்கொள்ளப் போகிறது.

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் — 1909-ல் — காஞ்சி நகரத்தில் நடராசனார் — பங்காரம்மாள் தம்பதிக்குக் குழந்தையாக அறிஞர் அண்ணா பிறந்த [illegible] வானத்தில் விசேஷமான சம்பவம் ஏதும் நிகழவில்லை. ஆனாலும், தமிழர்களை ஒன்றுபடுத்திய சக்தி அன்றுதான் பிறந்தது; தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அன்றுதான் விதையூன்றப்பட்டது; ஜனநாயக அரசியலின் துவக்கத்துக்கும் அன்றுதான் அடிகோலப்பட்டது.

மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அறிவுரை கூறும் ஆசானாக திருவள்ளுவர் திகழ்வதை நாம் அறிவோம். அதேபோல், ஐரோப்பாவில் லியனார்டோ டாவின்சி, அமெரிக்காவில் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின், சீனாவில் கன்ஃப்யூசியஸ் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் தொடாத துறையில்லை; ஒளியூட்டாத வாழ்க்கை முறைகளில்லை. அறிஞர் அண்ணாவும் இந்த வரிசையில் வைத்தெண்ணத்தக்கவர். புதைபொருள் ஆய்வு, மனோதத்துவம், மனித இயல்பு, சட்டம், தத்துவம், ஒழுங்கு, அரசாங்கம், சொத்துரிமை, குடும்பம், கலை, சமயம், வரலாறு

⇨

வழிகாட்டண்ணா

கலையழகன்

தேரோடும் வீதியிலே நடந்தால் கூட
    திட்டென்பர்! அந்நிலையை மாற்றி நாங்கள்
சீரோடு வாழவழி செய்தீர்! கல்வி,
    சமுதாய நிலையால்பிற் படுத்தப் பட்டோர்
யாரோடும் சமமாக உயரு தற்கு
    இருந்த சட்டம் தனைமாற்றி எங்கள் வாழ்வை
வேரோடு சாய்க்கின்றார்! அந்தோ! எங்கள்
    விழிநீரைத் துடைப்பதற்கு வழிகாட் டண்ணா!

படம்போட்ட கொடிபிடிக்கும் கொடியர் உங்கள்
    பாதைமாறி போகின்றார்! கொள்கை தன்னில்
புடம்போட்ட தங்கத்தை 'மாயை'யாலே
    புறமொதுக்கி விட்டதினால், பெரியார் செய்த
'குடம்' போட்டு உடைக்கின்றான் ஆண்டி! 'மேலோர்'
    குறிக்கோள்போல் நடக்கிறது! 'திறமை' யால்முன்
இடம்போட்டுக் கொண்டார்கள்! எமையின் தள்ளும்

கோபாலபுரத்தின் குடை நிழலில்

நுரைத்தாடிப் பெரியாரே! நூதன அறிஞரே!
எரியாறு பலதாண்டி ஏற்றம் பலதந்தீர்!
நீங்கள் இங்கில்லை நிலத்தடியில் அடங்கிவிட்டீர்!
நீள்மூச்சு விடுகின்றோம்! நிம்மதியை இழக்கின்றோம்!

''பெரியார் அண்ணா பெருவழியே எம்வழியாம்''
பெரிய குரலெடுத்துப் பேசுகின்றார். ஆனால்;
உரியஉரி மையெலாம் ஒடுக்கித் தீய்க்கின்றார்!
தெரிய நடக்கின்ற தெருவீதி நிகழ்ச்சியது!
(நீங்கள் இங்கில்லை....)

தட்டினாற் பற்றும் தீக்குச்சி போன்ற
தன்மானத் தமிழரிங்கே தாய்மானம் இழக்கின்றார்!
எட்டியோடும் பகையாவும் முட்டவருகு திங்கே!
கட்டியம் கூறிடவோ கண்ணியம் தடுக்குதிங்கே!
(நீங்கள் இங்கில்லை...)

இருநூற்றாண் டுசாதனை இருபதே ஆண்டுகளில்
இருகோடாய் நெடுங்கோடி இந்நாட்டில் சாதித்தீர்!
இருஆண்டே போதுமென இடித்துத் தகர்க்கின்றார்!
வெறும்கூ றாகியே வெந்து மடிகின்றோம்!
(நீங்கள் இங்கில்லை....)

அசலும் நகலும் அறியாத பேர்வழிகள்
நிசமெனவே நம்புகின்றார் நிழலை நித்தியமாய்!
பொய்மானை வேண்டும் புராணச் சீதைகள்
மெய்யாய் மலிந்துவிட்டார் மெய்யுரைகள் புரிவதில்லை!
(நீங்கள் இங்கில்லை....)

என்றாலும் நாங்கள் எந்நாளும் ஓய்வதில்லை
குன்றங்கள் அசைந்தாலும் கொள்கைவழி அசையாத
கோபால[illegible]ரின் குடைநிழலில் நிற்பதனால்
மாபாதகம் [illegible] [illegible]கின்றோம்!
([illegible]....)

-கரந்தை கணேசன்-

ஆகிய அத்தனையிலும் அறிஞர் அண்ணாவின் ஆய்வும் முடிவும் நமக்கு கிடைத்திருக்கின்றன.

உலகத்து ஜனநாயகவாதிகள் எழுதிக் குவித்துள்ள அத்தனை நூல்களைக் காட்டிலும்,

''மாற்றான் தோட்டத்து
மல்லிகையும் மணக்கும்''

என்ற சொற்றொடர் அதிகப்படியான ஜனநாயக உணர்வை — [illegible] புத்தன்மையை நம்மிடையே பரப்பியிருக்கிறது.

தேசப்பற்று குறித்து எழுதப்பட்டுள்ள அத்தனை நூல்களையும்விட

''வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற
முடியும்''

என்கிற சொற்றொடர் ஊட்டுகின்ற நாட்டுப்பற்று அதிகமானது.

உலகத்திலுள்ள அத்தனை அரசியல் வரலாறுகளையும்விட,

''அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை; தொடர்ந்து நிலைத்திடும் நண்பர்களும் இல்லை. ஆனால், நமக்கென இருக்கவேண்டிய நிலையான — நிரந்தரமான இலட்சியம் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றமே ஆகும்''

என்பதில் நாம் கொள்ளும் தெளிவு மகத்தானது.

இவைகள் அனைத்தையும்விட, மொழியின் மாண்பும், ஜனநாயகத்தின் அருமையும் அறிஞர் அண்ணா அவர்களால்தான் முழுமையாக உணர்த்தப்பட்டன.

மொழியை வளர்த்ததிலும், ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்றியதிலும் உலகத்தாரால் ஒருசேர போற்றப்படும் மாமனிதர்கள் பிறந்த ஆண்டும் அறிஞர் அண்ணா பிறந்த ஆண்டும் ஒரே வரி[illegible]யில் வருவதும் வரலாற்றுச் சிறப்புகளில் ஒன்று.

''லத்தீனும் பிரெஞ்சு மொழியும் தாம் உலகத்திலேயே உயர்ந்த மொழிகள் என்று கருதப்பட்டதை மாற்றியமைக்க வேண்டும்'' என்கிற முடிவோடு தனது இறுதிநாள் வரை பாடுபட்டு ஆங்கில மொழியின் அருமையும் பெருமையும் அகில உலகத்திலும் உணரப்படுவதற்குக் காரணமாக இருந்த பேரறிஞன் டாக்டர் ஜான்சன் பிறந்தது 1709.

ஜனநாயகத் தத்துவத்தின் நிலைக்களனாக — நிரந்தர ஒளியாக — அழியாத சாதனமாக விளங்கும் ஆபிரகாம் லிங்கன் பிறந்தது 1809.

இந்த இருவருக்கும் சற்றும் குறையாமல், மொழியையும் ஜனநாயகத்தையும் வலுப்படுத்திய பேரறிஞர் அண்ணா பிறந்தது 1909.

1909-ல் பிறந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு நாம் பெருத்த மகிழ்வோடும் ஏற்பாடுகளோடும் காத்திருந்த காலத்தில் நம்மையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்தி மறைந்துவிட்டார்.

பேரறிஞர் அண்ணா மறைவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னால் — 1959-ல் தஞ்சையில் கொண்டாடப்பட்ட தமது பிறந்த நாள் பொன்விழாவின்போது,

''எனக்கு அடுத்தபடி என் பணியை என் தம்பி கருணாநிதி செய்து முடிப்பார்''

என்று சொன்னார்.

இன்று கலைஞர் அவர்கள் எல்லாவிதக் கொடுமைகளையும், அவதூறுகளையும், இன்னல்களையும் தாங்கிக் கொண்டு ஆற்றுகின்ற ப[illegible]கள் அவைதாம்!

அறிஞர் அண்ணா அவர்கள் தமது மறைவுக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னால், இதே நாளில், தெரிவித்த கருத்துக்களை, அவர் மறைந்து, பத்தாண்டுகளுக்குப் பின்னால், இதே நாளில், நாம் நினைவு கூர்ந்து, கலைஞர் அவர்களின் தொண்டில், உழைப்பில், எழுத்தில், பேச்சில் அறிஞர் அண்ணாவைக் காண்பதுதான், பிறந்த நாளில் அண்ணாவுக்கு நாம் செலுத்தும் மரியாதை — வீர வணக்கம்.

அண்ணாவின் தமிழ்ப்படை அணிவகுக்கட்டும்!

-சா. கணேசன்-

''தமிழாய்ந்த தமிழ் மகன்தான தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்'' —

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமது தணியாத வேட்கையை கனிச்சுவை தமிழால் பாடினார்.

1967-ம் ஆண்டு தமிழக மக்கள் பாவேந்தரின் உள்ளக் கிடக்கைக்கு உவகையோடு உருவம் தந்தார்கள்.

ஆம்! தேர்தலில் தி. மு. கழகத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை வழங்கியதன் மூலம் தன்னிகர் இல்லாத தலைவர் அண்ணாவை தமிழகத்தின் முதல்வராக அரியாசனத்தில் அமர்த்தினர்.

முதலமைச்சராகப் பேரறிஞர் அண்ணாவும், பொதுப்பணி அமைச்சராகக் கலைஞரும் பொறுப்பேற்றனர்.

நாட்டில் எங்கும் தமிழ் மறுமலர்ச்சி தழைக்கத் தொடங்குகிறது. தமிழர் உணர்வு நாடெங்கும் பூத்துக் குலுங்குகிறது.

தாம் பிறந்த மண்ணை — தமிழகத்தை மக்கள் எண்ணிப்பார்க்கிறார்கள்.

வாழ்ந்த காலத்து வரலாறு திரும்புகிறது. பொற்காலம் மீண்டும் புலர்கிறது.

[illegible]னம் — இமயம் [illegible] பொறித்தது. கடல் கடந்து வாணிபம் நடாத்தி உலகந்தழுவிய அளவில் தமிழர் பெருமையை நிலை நிறுத்தியது.

பண்டைய சேர, சோழ, பாண்டியர் படைத்த வரலாற்றை பேரறிஞர் அண்ணா புரட்டிப் பார்க்கிறார்!

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகக் கண்ணோட்டத்தின் பெருமகன் அண்ணா 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் உலகத் தமிழ் மாநாடு கூட்டுகிறார்.

உலகின் எந்தப் பகுதியில் பிறந்த வேற்றுமொழியினராக இருப்பினும் தமிழாய்ந்தவர்களை, தமிழ் அறிஞர்களை அன்போடு அழைக்கிறார்.

சோவியத் பூமியிலிருந்து தமிழறிஞர் செம்பியன், செக்கோஸ்லோவாக்கிய மண்ணிலிருந்து தமிழறிஞர் கமில்சுவலபில், ஈழத்திலிருந்து தமிழமைச்சர் திருச்செல்வம் வருகை தந்தனர்.

மேலும் ஐரோப்பிய நாட்டிலிருந்தும் கிழக்காசிய நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்களும் தமிழ் ஆராய்ச்சி கருத்தரங்கு மாநாட்டில் பங்கு பெற்றனர்.

டாக்டர் மு.வ., வ.சுப. மாணிக்கம் இன்னபிறரும் பங்கு பெற்றனர்.

மாநாடு தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்

திருவள்ளுவர், ஔவையார், கம்பர், ஜி. யூ. போப், கால்டுவெல், பாரதியார், பாரதிதாசன், வ.உ.சி., வீரமாமுனிவர், கண்ணகி ஆகியோரின் சிலைகள் நிறுவப்பட்டன.

இந்தச் சிறப்புக்குக் காரணமாக விளங்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் தலைநகரில் சிலை அமைக்கப்பட்டது.

மாநாட்டின் முந்திய நாள் மாநகரில் மாபெரும் ஊர்வலம். இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். யானைகள் ஊர்வலத்தின் முன்னே செல்ல இன்னிசைக்குழு இசை பொழிய அலங்கார வண்டிகள் அணிவகுத்துப் பின் தொடர ஊர்வலம் சென்றது. நகர மக்கள் மட்டுமின்றி, நாட்டுப்புறத்து மக்களும், மாநாட்டில் பங்குகொள்ள வந்தவர்கள் ஊர்வலத்தைக் காண திரண்டிருந்தனர். கருத்தரங்கு மாநாடு இந்தியக் குடியரசுத்தலைவர் ஜாகீர் உசைன் அவர்களால் தொடங்கிவைக்கப்படுகிறது.

ஏழு நாள் மாநாடு எழிலோடு நடக்கிறது. கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், நாட்டிய நாடகம், இன்னிசை நிகழ்ச்சி, தமிழிசை, கலைஞர் அவர்களின் நாடகங்கள் ஆகியவை இடம்பெற்றன.

மாநாட்டின் முதல் நாளிலும் கடைசி நாளிலும் பேரறிஞர் அண்ணா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையாற்றுகிறார்.

கலைஞரும், பேராசிரியரும் இன்னபிற தமிழ் அறிஞர்களும் பங்கு பெறுகின்றனர்.

ஊர்வலச் சிறப்புக்கும், மாநாட்டுச் சிறப்புக்கும், மலர் வெளியீட்[illegible]து பாடுபட்ட அருமைத் தொண்டர்களையும், தமிழறிஞர்களையும் அண்ணா பாராட்டினார்.

தமிழகத்தில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் ரூபாய் மூன்று லட்சம் வீதம் திருக்குறள் ஆய்வு நடத்திட அறிஞர் அண்ணா அவர்கள் வழங்கினார்.

தொண்டர்களுக்குப் பாராட்டிதழ் அளித்துப் பாராட்டினார்.

புறப்பணிக்குழுவில் பணியாற்றிய நீலநாராயணன் அவர்கட்கும், எனக்கும், இன்னபிற தோழர்களுக்கும் தங்கப் பதக்கத்தைக் கலைஞர் எடுத்துக் கொடுக்க அண்ணன் அணிவித்து மகிழ்கிறார்; மகிழ்விக்கிறார்.

எனது இல்லத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கும் தங்கப் பதக்கத்தைக் காணும்போதெல்லாம் உள்ளம் உவகை [illegible]கிறது. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு கண் முன்னாலே வந்து காட்சி தருகிறது.

அண்ணாவும், கலைஞரும் பதக்கத்தின் இரு பக்கங்களிலும் பளிச் சென்று காட்சி தருகின்றனர்.

மொழி உணர்வும், தமிழர் இன உணர்வும், நாட்டுப் பற்றும் உள்ளத்தில் தழைத்து நிற்கி[illegible]து.

தமிழ் என்றால் அண்ணா — அண்ணா என்றால் கலைஞர்.

கலைஞரின் உருவிலே எம்போன்ற கழகத் தொண்டர்கள் சங்கிலித் தொடர்போல் நினைவுக்கு வரும்போது இதயம் இனிப்பாகிறது.

அந்த நினைவுகளின் இனிமையிலேயே இன்னொரு பொற்காலத்தை நோக்கி தலைவர் கலைஞரின் தலைமையில் அண்ணாவின் தமிழ்ப்படை அணிவகுக்கட்டும்.

வெற்றி பெற வேண்டும்...

''புயல் பலமாகத்தான் இருக்கும்: சந்தேகமில்லை. நாம், அதனை எதிர்த்து நின்று வெற்றி பெற்றாக[illegible]ண்டும். ஏனெனில்; நாம், தனி[illegible]களுக்காக அலல அரசியல் கட்சி என்பதற்[illegible]க அல்ல; விடுதலை இய[illegible]ம் இது — இதற்கு மககளிடம் ஆதரவு நாளுககு நாள் பெருகி வருகிறது என்பதை உலகறியச் செய்தாக வேண்டும். அதற்காக நாம், தேர்தலில் வெற்றி பெற்றாகவேண்டும்.

- அறிஞர் அண்ணா

டெக்ஸ்மோ

TEXMO

மோட்டார் ~ பம்பு செட்டுகள்



மற்றும் எல்லாவிதமான மின்சார சாதனங்கள் கிடைக்குமிடம்

செல்வம் ஏஜன்ஸிஸ்

23, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர் - 641 018.

போன் : 26878 செந்தில்

தீபாவளி பண்டிகைக்காகவே பல புதிய டிசைன்கள் அறிமுகம்

ஆடவரும் பெண்டிரும் அணிந்து மகிழ எழில் கொஞ்சும்

BURAK MARK

புராக் மார்க்

லுங்கிகள் & கைக்குட்டைகள்

எண்ணற்ற டிசைன்கள்,
கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள்!

எடுப்பான தோற்றம், உறுதியான
சாயம், நீடித்த உழைப்பு!

தயாரிப்பாளர்கள் :

போன் : 545

V. G. L. கம்பெனி

கடலூர் துறைமுகம்-607003.

எங்களின் புதிய ஷோரூம்கள் :

போன் : 896

86, லாரன்ஸ் ரோடு, திருப்பாப்புலியூர்-607002.
9, & 10, சிவலிங்கமுதலி தெரு, கடலூர் துறைமுகம்.

கோ[illegible] நகரில் எங்கும் கிடைக்காத [illegible] அமைந்த
கண்ணைக் கவரும் அழகிய டிசைன் [illegible]

நவநாகரீக பிளாட்டின நகைகள் பரிசுக்கு உகந்த வெள்ளி பாத்திரங்கள்,
மற்றும் வெள்ளி நகைகள் வாங்க கோவையில் கைராசியான ஸ்தாபனங்கள்.

P. A. R. விஸ்வநாதன் செட்டியாரின்

R. V. ஜுவல்லர்ஸ்
R. V. சில்வர்ஸ்

(ஏர்கண்டிஷண்ட் நகை மாளிகை)

262, பெரியகடை வீதி, கோயமுத்தூர்-641001.

போன் : 31316 தந்தி : 'GOLD'

தீபாவளி சிறப்பு குலுக்கல்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்களது
நகை. சேமிப்பு திட்டத்தின் 3-வது குருப் தீபாவளி சிறப்பு குலுக்கல் ஆகஸ்டு 16-ம் தேதி முதல் ஆரம்பித்திருக்கிறோம். குறைந்த இடங்களே உள்ளன இன்றே ரூ 100/- செலுத்தி உறுப்பின ராகுங்கள்.

TEL: JAKAYKAY

PHONE: 669
(BHAVANI)

J. K. K. TEXTILE PROCESSING MILLS

POST BOX NO: 55

KOMARAPALAYAM-638183.
(Via) ERODE.

கொமாரபாளையம் புதிய காவிரி பாலம் அருகில் உள்ள எங்களது பிராசசிங் மில்லில் வாடிக்கையாளர்களின் முழுத் திருப்திக் கேற்றவாறு அதி நவீன மிஷின்களைக் கொண்டு அனுபவ மிக்க ஆட்களைக்கொண்டு துணிகளை பிளீச்சிங், டையிங, ஃபினிசிங் செய்து கொடுக்கிறோம். இப்பொழுது எங்கள் உற்பத்தித்திறனில் 90% மேல் வெளிநாட்டு ஏற்றுமதி துணிகளை பிராசஸ் செய்து கொடுக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறோம்.

J. K. K. **J. K. K.**

TEL: COTTON
TELEX: 0856244
PHONE
OFF: 216, 321 & 612
RES. 310 & 311 (BHAVANI)

Sundaram Spinning Mills

POST BOX No. 25
Kumarapalayam - 638183
(Via)·Erode, S Rly. South India
Leading Exporting Mill In the South

MANUFACTURERS OF
CARDED AND COMBED QUALITY YARNS
FROM 10s to 100s COUNTS IN HANK AND
CONE FORMS IN SINGLE AND FOL...

OUR HIGH TWI...
A SPECIALITY

LICENCED CAPA...
30,228 SPINDLES, 300 AUTOMATIC
POWER LOOMS
WORKING CAPACITY: 26,108 SPINDLES
4,000 DOUBLING SPINDLES

MANAGING PARTNERS...
J.K.K. ANGAPPAN
J.K.K. SUNDARAM
J.K.S. MANICKAM
J.K.A. KANDASAMY
B.TECH(TEX)
J.K.A. ASOKAN

வாழ்க அண்ணா

தந்தி: "CHUDAMBIKA"
போன்:
ஆபீஸ்: 20038
21668
மில்: 20182

ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட்

59-ஏ, 15, பி. எஸ். சுந்தரம் ரோடு
தபால் பெட்டி நம்பர் 65
திருப்பூர் 638601

நாங்கள் பல ஆ... களாக ... உள்நாட்டு உயாரக பருத்தியிலிருந்து 20 முதல் 60 நம்பர் நூல்வரை கைத்தறி விசைத்தறி மற்றும் பனியன் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கோம்புடு, கார்டடு, ஹொசைரி நூல்கள் உற்பத்தி செய்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்துவருகிறோம்.

எங்களுடைய தயாரிப்பான SRC 20001, SRC 2002 காடா மற்றும் சலவைத்துணி உள் நாட்டு உபயோகத்திற்கும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் நல்லமுறையில் தயாரிக் கிறோம்.

போன்: 208 பவானி தந்தி: பங்களா

கந்தசாமி வீவிங் பேக்டரி அன் கம்பெனி

தபால் பெட்டி எண். 33
சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம்-638183.
சேலம் ஜில்லா

30 ஆண்டுகளாக நல்ல தரமான டிஸைன் ஸ்டேபிள் பைபர் செக் லுங்கிகள் மற்றும் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகக்கூடிய உயர்ந்த துணி ரகங்கள் தயாரிப்பாளர்கள்.